janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2024 பிப்ரவரி 11 - பிப்ரவரி 17 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 45




## அதிகாரத்திலிருந்து ஆர்எஸ்எஸ்-பிஜேபியை அகற்ற

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஆயத்தமாவீர்!






## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டம் அழைப்பு!

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழுக்கூட்டம் தெலுங்கானா தலைநகர் ஹைதராபாத்தில், மாநிலத் தலைமையகமான 'மக்தூம் பவனில்' பிப்ரவரி 2, 3, 4 ஆகிய தேதிகளில், ராமகிருஷ்ணா பாண்டா, சாம்பசிவராவ் எம்எல்ஏ, நிஷா சித்து ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.**

அரசியல் வளர்ச்சிப் போக்கு குறித்த வரைவு அறிக்கையை பொதுச் செயலாளர் டி.ராஜா முன்வைத்து பேசினார். சர்வதேச நிலைகளைப் பற்றி செயலாளர் பல்லப் சென்குப்தா விளக்கவுரை ஆற்றினார்.

அறிக்கையின் மீதான விவாதத்தில் மாநில பிரதிநிதிகளும் அரங்கப் பிரதி நிதிகளுமாக 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுப் பேசினர். அதில் சுட்டிக் காட்டப்பட்ட சில திருத்தங்களை ஏற்று டி ராஜா தொகுப்புரையாற்றிய பின்பு அறிக்கை ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### அரசியல் அறிக்கையின் சில பகுதிகள்:

ஐந்து ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரம் என்று பிரதமர் மோடி பெருமை அடித்துக் கொண்டாலும், உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான ஏழைகளும், பட்டினியில் வாடுவோரும் வாழும் நாடாக நமது நாடு உள்ளது. உலக அளவிலான பல புள்ளி விவரங்கள் இவற்றைச் சுட்டிக்காட்டுகின்றன.

80 கோடி மக்களுக்கு ரேஷன் பொருட்கள் வழங்குவதாக அரசாங்கம் கூறினாலும், அவை எங்கு செல்கின்றன என்பது யாருக்கும் தெரியாது. மேலும் பல லட்சக்கணக்கான குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

விலைவாசி உயர்வு விண்ணை முட்டுகிறது. சாதாரண மக்கள் வாழ இயலாத அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்

நாடாளுமன்றத்தில் எந்த விவாதமும் கலந்துரையாடலும் இல்லாமல், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் மொத்தமாக வெளியேற்றிவிட்டு சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

எதிர்க்கட்சி தலைவர்களை குறி வைத்து அமலாக்கத் துறையும் புலனாய்வுத் துறையும் ஏவி விடப்படுகின்றன.

மக்களின் பிரச்சனைகளை திசை திருப்புவதற்காக, பொதுத் தேர்தலுக்கு முன்பாக அயோத்தியின் ராமர் கோவில்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## அடக்குமுறைகளை எதிர்கொள்வோம்! இறுதி வெற்றி நமதே!

### தேசியக் குழு கூட்டத்தில் சுதாகர் ரெட்டி முழக்கம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழுக்கூட்டம் பிப்ரவரி 2, 3, 4 தேதிகளில் ஹைதராபாத்தில் நடைபெற்றது. கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி, உடல் நலிவுற்ற நிலையிலும் கூட்டத்திற்கு வந்தார் . மெய்சிலிர்க்கும் வகையில் தேசிய குழு தோழர்களை வாழ்த்திப் பேசினார்.

அவரது பேச்சின் சுருக்கம் வருமாறு:

தேசியக் குழு கூட்டத்துக்கு வந்து உங்களிடம் சில வார்த்தைகள் பேசவேண்டும் என்று பொதுச்செயலாளர் தோழர் ராஜா கேட்டுக் கொண்டார். இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன். நாம் ஒரு கடினமான காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உலகத்தின் சில நாடுகளில் இடதுசாரிகள் ஆதரவோடு சமூக ஜனநாயகக் கட்சிகளின் அரசுகள் இருந்தாலும், பல நாடுகளில் வலதுசாரி சக்திகள் ஆட்சியை நடத்திக் கொண்டுள்ளன.

இந்தியாவில், மதவெறியூட்டி, தீவிர தேசிய வாதம் பேசும். ஆட்சி நடக்கிறது.

நாடாளுமன்ற தேர்தல் நடக்கப் போகிறது. இது நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடக்கப் போவதில்லை. ஒரு தரப்புக்குச் சாதகமாகவே நடக்கும்.

இந்தியாவில் ஜனநாயகம் பாதுகாக்கப்படுவதா அல்லது மோடியிடம், இந்துத்துவ சக்திகளிடம் சரணடைந்து விடுவதா என்பதை இத்தேர்தல் தீர்மானிக்கக் கூடும்.

எதிரணியை சிதறடிக்கவும், பலவீனப்படுத்தும் பல்வேறு தந்திர நிலைகளை பாஜக எடுத்து வருகிறது. களத்தில் உள்ள மற்ற காட்சிகளைக் காட்டிலும் நமக்கு அதிகப் பொறுப்பும் கடமையும் உள்ளது.

நமது கட்சியின் தேசிய அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம் பறித்துள்ளது. நம் கட்சியின் உண்மையான பலத்திற்கேற்ற அளவில் நாடாளுமன்றத்தில் பிரதி நிதித்துவம் கிடைக்கவில்லை. நாடாளுமன்றம், சட்டப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையும் நமது நிஜ வலிமைக்கு ஏற்றதாக அமையவில்லை.

நடத்தும் இயக்கங்களோ, போராடும் வல்லமையோ அல்ல, பெறுகிற வாக்குகளும் வெல்கிற எண்ணிக்கையும் மட்டுமே அங்கீகாரத்திற்கான அளவுகோள்களாக உள்ளன.

நாம் நான்கு மாநிலங்களில் அங்கீகாரம் பெற்றாக வேண்டும். இன்று நிலவும் சூழலில் தேர்தல் களத்தில் ஆக்ரோஷமான மோதல் அவசியமாகிறது. போர்க்குணம் பொருந்தியதாக, ஆழமும் அகலமும் கொண்டதாக, வலிமையை ஒன்று திரட்டி நாம் இதனை எதிர்கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்தில் இருக்கைகளுக்கு நமது தோழர்கள் சிலரை அனுப்பி வைப்பது மட்டுமல்ல, இந்தப் பாசிச சக்திகளை எதிர்த்து முறியடிப்பது நமது மிக முக்கிய கடமையாகும்.

தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதங்களே இருக்கின்றன. நாட்டு மக்களின் வாழ்வாதாரமும், அடிப்படைத் தேவைகளும் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளன. அரசின் கொள்கைகளால் கீழே தள்ளப்பட்டு இருக்கிற தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் ஆகியோர்களின் உணர்வு நிலை அரசுக்கு எதிராகவே இருக்கிறது. அதனை மழுங்கடிக்க, பிரச்சனைகள் அல்லாதவற்றை பிரச்சனைகளாக்கி விவாதிப்பதில் இந்த அரசு ஈடுபடுகிறது. மக்களின் உண்மையான பிரச்சினைகளை முன்வைத்து போராடுவது தான், அதில் பாதிக்கப்பட்ட மக்களையும் சேர்த்து திரட்டுவது தான் பாசிச சக்திகளை எதிர்கொள்வதற்கான சரியான வழிமுறையாகும்.

நமது பங்கை நாம் சரியாக நிறைவேற்றுவோம். இன்றைய அரசியலை தெளிவாகப் புரிந்து கொண்டு, மக்களுக்கு எடுத்துரைப்போம்.

விலைமதிப்பற்ற தியாகங்களை செய்து இந்த நாட்டுக்கு விடுதலையை வென்றெடுத்தோம். ஜனநாயகத்தை நமது நெறிமுறை ஆக்கினோம். இன்று அந்த நெறிமுறைகளை பாசிச சக்திகள் அழித்துக் கொண்டிருக்கின்றன. நாட்டையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்கு நம்மை அர்ப்பணிப்போம்.

உலகமெங்கும் கம்யூனிஸ்ட்டுகள் மிகப் பெரும் அடக்குமுறைகளை சந்தித்து இருக்கிறார்கள். ஆனால் எப்போதுமே வெற்றியைப் பெற்று இருக்கிறார்கள்.

கியூபா, தென்னாப்பிரிக்கா, நேபாளம் போன்ற நாடுகளில் ஜனநாயகத்தை நிலை நாட்ட, நமது தோழர்கள் ஏற்ற இன்னல்களை நினைவில் கொள்வோம்.

செங்கொடிகளை உயர்த்திப் பிடிப்போம். மக்களோடு மேலும் நெருக்கமாவோம். எல்லாத் தீமைகளையும் எதிர்த்து சமரசமற்றுப் போராடும் சக்தி நமக்கு மட்டுமே உண்டு.

நாட்டையும், அதன் ஜனநாயக விழுமியங்களையும், அரசியல் சாசனத்தையும் காக்கும் போராட்டத்தில் உங்களுக்கு வெற்றிகிடைக்கட்டும் என்று வாழ்த்துகிறேன்.

கட்சிக் கடிதம்

# ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெறுமா?



போர்க்குணமிக்க தோழர்களே!

**ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற வேண்டிய நாடாளுமன்றத்திற்கான, 18வது பொதுத்தேர்தல் இவ்வாண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பல கட்டங்களாக நடைபெற்றாக வேண்டும்.**

அரசியலமைப்பு சட்டத்தின்படி தேர்தலை நடத்திட வேண்டிய கட்டாயம் உள்ளது. இப்படி ஒரு விதி இல்லை எனில், அவ்வாய்ப்பை பயன்படுத்தி பொதுத்தேர்தலை நடத்தாமல், நாங்கள் தான் நாட்டிற்கு ராஜா. எங்களை யாரும் எதுவும் செய்ய இயலாது என்று மார்தட்ட தயங்க மாட்டார்கள்.

மூன்றாம் முறையாக நான் தான் பிரதமர் என முழங்குகிறார் திருவாளர் மோடி.

அடுத்த நிதிநிலை அறிக்கையினை நான் தான் சமர்ப்பிப்பேன் என்கிறார் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாஜகவின் தலைவர் நட்டா உட்பட நாங்கள் தான் ஆட்சிக்கு வருவோம் என திரும்பத், திரும்ப கூறி வருகின்றனர்.

நாங்கள் தான் ஆட்சிக்கு வருவோம் என குறிப்பிடும் இவர்கள் எந்த நம்பிக்கையில் கூறுகின்றார்கள்?

கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் தாங்கள் செய்திட்ட சாதனைகளை எடுத்து கூறி, அதன் மூலம் நாட்டு மக்களின் ஆதரவை பெற்றுவிட முடியும் என்கிற நம்பிக்கை இவர்களிடத்தில் கிஞ்சிற்றும் இல்லை.

ஏனெனில் அவர்கள் எந்த சாதனைகளையும் நிகழ்த்தி விடவில்லை, கடந்த தேர்தலில் மக்களுக்கு அளித்திட்ட வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்ற வில்லை.

பாஜக ஆட்சிக்கு வந்தால், மோடி பிரதமரானால் அனைவருக்கும் வேலை கிடைக்கும் என்கிற பெரும் எதிர்பார்ப்புடன் இருந்த இளைஞர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது பாஜக அரசு.

இளைஞர்களை ஏமாற்றியது மட்டுமல்ல, வேலையில் இருந்த இளைஞர்களையும் வீட்டிற்கு அனுப்பி சாதனை படைத்தது மோடி அரசு.

நாட்டில் வாழும் 140 கோடி மக்களில் 60% மேற்பட்ட மக்கள் விவசாயிகள் ஆவார்.

அவர்களின் நீண்ட நெடுங்கால கனவு, தங்களின் உற்பத்தி பொருளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கும் என்பது மட்டுமல்ல, வேளாண் விஞ்ஞானி எம். எஸ். சுவாமிநாதன் கமிட்டி பரிந்துரை ஏற்கப்பட்டு, உற்பத்தி செலவை காட்டிலும் கூடுதலாக இரண்டு மடங்கு விலை நிர்ணயம் செய்து, தங்களுக்கு லாபம் கிடைக்கும் என்று பெரிதும் நம்பிய அவர்களுக்கு, பெரும் துரோகத்தை இழைத்தது மோடி அரசு.

கட்டுபடியான விலையும் இல்லை, லாப விலையும் இல்லை என்பது மட்டுமல்ல, விவசாயிகளுக்கு எதிரான வேளான் சட்டங்களை நிறைவேற்றினார்கள்.

ஆண்டுக் கணக்கில் விவசாயிகளின் போராட்டம் தலைநகர் டெல்லியை குலுங்கச் செய்தது, கடும் குளிர், மழை, பணி, வெயில் என அனைத்து இயற்கை சீற்றங்களையும் கொடிய கொரோனா பெருந்தொற்றையும் தாங்கிக் கொண்டு, 700 க்கும் மேற்பட்ட விவசாயிகளை பலி கொடுத்து, ஒன்றிய அரசின் வரம்பற்ற, அநியாய, அடக்குமுறைகளையும் எதிர்கொண்டு. உறுதியான போராட்டத்தில், ஒன்றுபட்ட போராட்டத்தில், நிலை குலையா நெஞ்சுறுதியுடன் போராடினர். வேறு வழியின்றி விவசாயிகளுக்கு எதிரான மூன்று வேளாண் சட்டங்களையும் ஒன்றிய அரசு திரும்பப் பெற்றது.

அத்துடன் போராடிய விவசாயிகளுக்கு வாக்குறுதி ஒன்றை வழங்கியது.

விவசாயிகளின் விலை நிர்ணய சட்டம், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதி.

தேர்தல் கால வாக்குறுதிகள் காற்றில் பறந்து காணாமல் போனது போன்று, விவசாயிகள் போராட்டத்தில் மோடி அரசால் எழுத்து பூர்வமாக கொடுக்கப்பட்ட வாக்குறுதியும் காற்றில் கரைந்து காணாமல் போனது.

மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் மூலம், ஒருவேளை கஞ்சியாவது குடித்து பசி போக்கி வந்த கிராமப்புற விவசாய தொழிலாளர்களின் வாழ்விலும், மண்ணைத் தூவியது மோடி அரசு.



மோடி அரசுக்கு தெரிந்த இந்திய நாட்டு மக்கள் அதானி, அம்பானி போன்றவர்கள் மட்டுமே.

ஒட்டுமொத்த நாட்டு மக்களின் எதிர்ப்பை விலை கொடுத்து வாங்கி உள்ள அரசு, தங்களை மக்கள் நாடாளுமன்ற தேர்தலில் புறக்கணிப்பார்கள் என்பதை நன்கு உணர்ந்துள்ளது.

நாடு தழுவிய முறையில் தேசிய கட்சிகள், இடதுசாரிகள், மாநில கட்சிகள் அனைவரும் ஒன்றிணைந்து இந்தியா கூட்டணி உருவாகியுள்ளது.

ஒரு சில மாநிலங்களில் தோழமைக் கட்சிகள் இடையே நிலவும் தொகுதி பங்கீடு முறையில் உள்ள, குறைகள் களையப்படும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

நல்ல மனிதராகக் கருதப்பட்ட பீகார் மாநில முதல்வர் நிதீஷ் குமார் முதுகில் குத்தி விட்டு சென்றுள்ளார். காலையில் ஒரு பேச்சு, மாலைக்குப் பின்னர் மறு பேச்சு என்ற நிலைக்கு சென்றுவிட்ட நிதீஷ் குமாருக்கு இருந்த மதிப்பு, மரியாதை அனைத்தும் இழந்து அம்மணமாக நிற்கின்றார்.

நிதீஷ் குமாரின் துரோகத்தனத்திற்கு, பீகார் மாநில மக்கள் உரிய பாடத்தை உறுதியாக புகட்டுவார்கள் என்பதில் எள்ளளவு ஐயமும் இல்லை.

இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி பெறும் என்பது மட்டுமல்ல, கம்யூனிஸ்ட் உறுப்பினர்களும் அதிக அளவில் வெற்றி வாகை சூடுவார்கள்.

இத்தகைய சூழலில் எந்த முகத்தை வைத்துக்கொண்டு பாஜக மக்களை சந்திக்கும்.

மோடியும், அமித்ஷாவும் எத்தனை வேடங்கள் போட்டாலும், அவர்களின் முகமூடியை மக்கள் அம்பலப்படுத்தி விடுவார்கள், நிராகரிப்பார்கள்.

மாறுவேட போட்டி நடத்தினால் அதில் மோடி வெற்றி பெறலாம், மக்களின் ஆதரவை ஒருபோதும் பெற இயலாது.

கடந்த பத்தாண்டு காலமாக நாட்டு மக்களுக்கு மோடி அரசு இழைத்திட்ட பெரும் கொடுமைகளை, அநீதிகளை, துரோகங்களை மக்கள் ஒருபோதும் மறந்திட மாட்டார்கள்.

நம் நாட்டு மக்கள் துரோகத்திற்கு என்றும் துணை போனது கிடையாது. மறக்கவும் மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள்.

இவை அனைத்தையும் நன்கறிந்த மோடி கும்பல், நாங்கள்தான் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்று எப்படி மார் தட்ட முடிகிறது என்பதுதான் எல்லோருடைய கேள்வியாக உள்ளது.

ஆம்! நியாயமான கேள்வி. தேர்தல் ஜனநாயக முறையில் நடந்தால் தானே, இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்க முடியும்!

ஜனநாயக முறையிலான தேர்தலை குழிதோண்டி புதைத்து விட்டால், பின் என்ன செய்வீர்கள் என்பது தான் பாஜகவின் திட்டம்!

ஜனநாயகமற்ற முறையில் தேர்தலை நடத்திட முடியுமா? என்று கேட்கத் தோன்றும்.

நடைபெற்ற சம்பவங்களை நினைவு கூர்ந்தால், மோடி, அமித்ஷா கூட்டணி எத்தகைய கொலை பாதக செயலையும் செய்யக் கூடியவர்கள் என்பதை உணர முடியும்.

தேர்தல் ஆணையம் என்பது அரசியலமைப்பு சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சுயேச்சையான அமைப்பாகும். யாருடைய உத்தரவுக்கும் அடிபணியாத, காத்திருக்காத அமைப்பாகும்.

இன்று அந்த மகத்தான அமைப்பு என்னானது, யார் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதனை கூர்ந்து கவனித்தால் உண்மை புலப்படும்.

தேர்தல் ஆணையம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது குறித்து, நீதி பரிபாலனம் வழங்கும் உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது. அத்தீர்ப்பு மிக தெளிவானது.

தேர்தல் ஆணையம் என்பது எவருக்கும் உட்படாத, கட்டுப்படாத சுயேச்சை அமைப்பாக இருக்க வேண்டும்.

ஆனால், தேர்தல் ஆணையத்தில் யார் உறுப்பினர்களாக இருக்க வேண்டும், என்பதனை முடிவு செய்ய உச்சநீதிமன்ற நீதிபதி உள்ளடக்கிய குழு அமைத்திடல் வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

மோடி அரசு உச்சநீதிமன்ற தீர்ப்பை செல்லாக்காசாக்கும் வகையில், நாடாளுமன்றத்தில் தனக்குரிய மிருக பலத்தை பயன்படுத்தி ஒரு சட்டத்தை நிறைவேற்றியது.

பிரதமர், பிரதமரால் நியமிக்கப்படும் ஒன்றிய அமைச்சர் ஒருவர் , எதிர்க்கட்சித் தலைவர் என மூவர் கொண்ட குழு அமைத்தது மட்டுமின்றி, மூவர் கூட்டத்தில் பெரும்பான்மை அடிப்படையில் முடிவு எடுக்கப்படும்.

அம்முடிவின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் அமைக்கப்படும் என்று சட்டத்தை நிறைவேற்றி, குடியரசுத் தலைவரின் மறுப்பின்றி ஒப்புதலும் வழங்கப்பட்டு விட்டது.

மூவரில் இருவர் பாஜகவை சேர்ந்தவர்கள். பெரும்பான்மை என்பது இருவர் தான் என்ற நிலையில், தேர்தல் ஆணையம் எப்படி ஒருநிலை தவறாத சுயேச்சையான

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

# பழிவாங்கும் போக்குடன் அமலாக்கத்துறை செயல்படுவதா?

## உச்சநீதிமன்றம் கண்டனம்



அருண் நெடுஞ்செழியன்

**எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளுக்கு நெருக்கடி கொடுப்பதற்காக அமலாக்கத்துறையை முக்கிய அரசியல் ஆயுதமாக பயன்படுத்திவரும் பாஜக, அதன் மோசமான பின் விளைவுகளை தற்போது எதிர்கொண்டுவருகிறது.**

பாஜகவின் கிளை அலுவலகமாக அமலாக்கத்துறை மாற்றப்பட்ட பின்னர், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் முக்கியப் பதவி வகிக்கும் அமைச்சர்கள், துணை முதலமைச்சர் போன்றோரை விசாரணை, கைது என மிரட்டப்பட்டனர். தற்போது ஜார்கண்ட் முதலமைச்சரை கைது செய்திருப்பது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், திமுக, ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒன்றிய பாசிச பாஜகவுக்கு பதிலடி கொடுக்கத் தொடங்கியுள்ளது. மறுபுறம் உச்சநீதிமன்றமும் குட்டு வைத்து வருவது பாஜகவிற்கு நெருக்கடியாக மாறிவருகிறது.

பாஜகவின் அரசியல் பேரத்திற்கு பணிந்து போகாத முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர்கள் போன்ற அரசியல் செல்வாக்கு மிக்க தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, சோதனை, விசாரணை, கைது என உளவியல் நெருக்கடியையும் அரசியல் நெருக்கடியையும் பாஜக கொடுத்து வருகிறது.

பாஜகவின் இந்தப் போக்கு மக்களிடம் அம்பலமாகி வரும் அதே நேரத்தில், அமலாக்கத் துறையின் அத்துமீறலுக்கு எதிராக மாநில அரசுகளும் அமலாக்கத்துறை அதிகாரிகள் மீது வழக்கு, விசாரணை, கைது என பதிலடி கொடுக்கத் தொடங்கிவிட்டது. ஜார்க்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரனை அத்துமீறி கைது செய்ததாக அமலாக்கத்துறை அதிகாரிகள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் அம்மாநில அரசு வழக்கு பதிந்துள்ளது.

தமிழ்நாட்டில்வேறொரு காரணத்திற்காக அமலாக்கத்துறை அதிகாரி கைது செய்ப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டது உச்சநீதிமன்றத்தில் விவாத பொருளாகியுள்ளது. பாஜகவும் அதன் கைப்பாவையான அமலாக்கத்துறையும் நடத்திவரும் அத்துமீறல்கள், சட்டப்பூர்வ வன்முறைகள் தற்போது, ஒன்றியமாநில அரசு அதிகாரிகளுக்கு இடையிலான பெரும் அதிகார மோதலாகவும் கூட்டாட்சி வடிவத்தையே பிளவுபடுத்துவதாகவும் மாறி விட்டது.

### கூட்டாட்சியே குலைந்துவிடும்

திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர் டாக்டர் சுரேஷ் பாபு என்பவர், வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கை அமலாக்கத்துறை கையில் எடுத்தது. இந்த வழக்கில் இருந்து விடுவிப்பதற்காக அவரிடம் பெரும் தொகையை லஞ்சமாகக் கேட்டு அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரி மிரட்டி வந்தார். அவரைத் திட்டம் போட்டு அதிரடியாக தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை கைது செய்தது. இந்த நிகழ்வு நாட்டின் பரபரப்பான தலைப்புச் செய்தியானது.

அங்கித் திவாரியின் ஜாமீன் மனு மீதான விசாரணையின் போது, லஞ்ச விவகாரத்தில் அமலாக்கத்துறை உயர் அதிகாரிகளுக்குத் தொடர்பு இருப்பதாகவும் அவருக்கு ஜாமீன் வழங்கக் கூடாது எனவும் தமிழ்நாடு அரசு வாதிட்டது. இதனிடையே, அங்கித் திவாரி மீது அமலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்ததுடன், தமிழ்நாட்டின் லஞ்ச ஒழிப்பு துறையிலிருந்து சிபிஐக்கு வழக்கை மாற்ற வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றத்தில் அமலாக்கத்துறை வழக்கு தொடர்ந்தது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் சூர்யகாந்த் மற்றும் கே.வி.விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அமலாக்கத்துறை சார்பாக ஆஜரான வழக்கறிஞர்கள், அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக அமலாக்கத்துறை அதிகாரியை தமிழ்நாடு அரசு கைது செய்துள்ளது என்றனர். மணல் குவாரி முறைகேடுகள் குறித்து அமைச்சர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பான ஆவணங்களை தமிழ்நாடு அரசு வழங்கு மறுக்கிறது எனவும் குற்றம்சாட்டினர்.

தமிழ்நாடு அரசு சார்பாக ஆஜரான மூத்த வழக்கறிஞர் கபில்சிபில், எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களைத் தேர்ந்தெடுத்து அமலாக்கத்துறை மூலம் அரசியல் பழிவாங்கு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்றும், இப்போக்கு தொடர்ந்தால் நாட்டின் கூட்டாட்சி தத்துவமே குலைந்துவிடும் என்றும் வாதிட்டார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த வழக்கு குறித்த கவலைகளை பகிர்ந்துகொண்டனர்.

### நாட்டின் எதிர்காலம் என்னாகும்?

“அமலாக்கத்துறை உள்நோக்கத்துடன் சில வழக்குகளை கையில் எடுப்பதாக தெரிகிறது” என்று கூறிய உச்சநீதிமன்ற நீதிபதிகள், “உள்நோக்கத்துடன் எடுக்கும் வழக்குகளில் நிரபராதிகள் தண்டிக்கப்படக் கூடாது. பழிவாங்கும் போக்குடன் அமலாக்கத்துறை செயல்படுவது தடுக்கப்பட வேண்டும்” என்றனர். “இதற்கு புதிய நடைமுறையை உருவாக்க வேண்டும். அதை தமிழ்நாட்டில் இருந்து தொடங்கி நாடு முழுவதும் அமல்படுத்தலாம்” என்றும் உச்சநீதிமன்றம் கூறியது.

“இப்படி ஒன்றிய அரசின் அதிகாரிகளும் மாநில அரசின் அதிகாரிகளும் மாறி மாறி குற்றம்சாட்டிக் கொண்டும், பழிவாங்கும் நடவடிக்கையாக மாறி மாறி கைதும் செய்தால் நாட்டின் எதிர்காலம் என்னாகும்?” என்றும் நீதிமன்றம் கவலை தெரிவித்தது.

### லஞ்சத்தை ஒழிக்கவா? எதிர்க்கட்சிகளை மிரட்டவா?

தமிழ்நாட்டில் அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான அமலாக்கத்துறையின் கைது நடவடிக்கையை நியாயப்படுத்தவும் மணல் குவாரி முறைகேடுகளுக்கு பதிலளிக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு சம்மன் அனுப்புவதையும் ஊழலை ஒழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதி என்று பாஜக கூறுகிறது. ஆனால், பாஜகவின் பேரத்திற்குப் படியாத எதிர்க்கட்சிகளை மிரட்டிப் பணிய வைப்பதற்கே அமலாக்கத்துறை பயன்படுத்தப்படுகிறது என்பது எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு.

இவை உண்மை என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றில் ஒன்று, மத்தியப் பிரதேச மாநிலம், போபாலில் பேசிய பிரதமர் மோடி, ‘ஊழல் செய்தவர்கள் யாரையும் விட மாட்டோம். ரூ.70 ஆயிரம் கோடி ஊழல் நடந்திருக்கிறது’ என்று கூறுகிறார். அடுத்த வாரமே இந்த ஊழல் குற்றச்சாட்டு கூறப்பட்ட அஜித் பவார், பாஜக அணிக்கு தாவுகிறார். மகாராஷ்டிரா மாநில துணை முதலமைச்சர் ஆகிறார். 70 ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் நடந்ததாக கூறப்பட்ட 9 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டன. அஜித் பவார் விடுவிக்கப்பட்டார். இதைப் பார்க்கும் போது அமலாக்கத்துறையை எதற்குப் பயன்படுத்துகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.




இப்படி எதிர்க்கட்சிகளை அமலாக்கத்துறை மூலம் மிரட்டுவது, ஒரே நாடு, ஒரே வரி; ஒரே நாடு ஒரே கல்விக் கொள்கை போன்றவற்றின் மூலம் மாநில அதிகாரங்களைப் பறிப்பது என பின்காலனிய இந்திய வரலாற்றில், இதுவரை இல்லாத வேகத்தில் நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் பொருளியல் அதிகாரமும் மையப்படுத்தப்படுகிறது. அதுவும் பெரும்பான்மை பலத்துடன் உள்ள மோடியின் பாஜக ஆட்சியில், இதுவரை இல்லாத வேகத்தில் நடந்து வருகிறது.

ஆர்.எஸ்.எஸ் பாஜகவின் கருத்தியல் தளத்தில், அரசின் சர்வாதிகாரப் போக்கை நியாயப்படுத்தும் பொய், பித்தலாட்டங்களை முழு பலத்துடன் செயல்படுத்திவருகிறது. உழைக்கும் வர்க்கத்தின் அணிசேர்க்கைக்கு தடையேற்படுத்தும் வகையில் வகுப்புவாத அரசியலையும் தீவிரப்படுத்தி வருகிறது. “தாராளமய இந்துத்துவ சர்வாதிகார அரசு” என்ற தனது முழு வடிவத்தை பாஜக தற்போது வெளிப்படுத்தி வருகிறது.

இன்று மக்கள் முன் இரு வாய்ப்புகள் மட்டுமே உள்ளன. ஒன்று இந்த காட்டுமிராண்டித்தனமான அரசை ஏற்பது அல்லது, இந்த அரசைத் தூக்கி எறிந்து சோசலிசத்தை நிறுவுவது.

காட்டுமிராண்டித்தனமா? சோசலிசமா? என்பதே நம் முன் இருக்கும் கேள்வி.

தொடர்புக்கு: 9842391963




## வினாடி - வினா

1 சுதந்திரப் போராட்டத்தின் போது சிட்டகாங் ஆயுதக் கிடங்கு கைப்பற்றப்பட்டது எப்போது?

2 சிட்டகாங் ஆயுதக் கிடங்கை கைப்பற்றும் எழுச்சிக்குத் தலைமை தாங்கியது யார்?


3 சூர்யா சென்னுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டதா?

4 தூக்கிலிடப்பட்ட சூர்யாசென், தாரகேஸ்வர் தஸ்தகீர் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டதா?

5 ஐ.நா சபை உருவாவதற்கு முன்பு சர்வதேச அளவில் அமைதிக்காக செயல்பட்ட அமைப்பு எது?

6 எக்ஸ் கதிர்களால் எதை ஊடுருவிச் செல்ல முடியாது?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 45

## ஒன்றும் குடி முழுகிப் போகாது!

வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் பதிவான வாக்கை காட்டுகிற விவிபாட் ஆகியவை குறித்த சில கேள்விகளை இந்தியா கூட்டணி சென்ற ஆண்டு ஆகஸ்ட் ஒன்பதாம் தேதி அன்று எழுப்பி தேர்தல் ஆணையத்துக்கு எழுதியது..

உச்ச நீதிமன்றம் 8.10.2013ல், தனது தீர்ப்பின் மூலம் வழிகாட்டியதற்கு பின்பு தான், வாக்களித்த சின்னத்தைப் பார்க்கும் வகையில் விவிபாட் சேர்க்கப்பட்டது. 10 சதவீத வாக்குச்சாவடிகளில் கூட இது அமலாகவில்லை.

அதில், ஒரு துண்டு காகிதம் தெரிகிறது. ஏழு வினாடிகளில் மறைந்து விடும். தொட்டுப் பார்க்கவும் முடியாது. எண்ணிப் பார்க்கவும் இயலாது.

இந்தியாவில் 1977 ல் வாக்குப்பதிவு பதிவு எந்திரங்கள் உருவாக்கப்பட்டன. அப்போது இணையதளம், வை – பை ஆகியவை கிடையாது. கணினி அறிவியல் வளர்ந்திருக்கவில்லை.

வாக்குப்பதிவு எந்திரம் என்று சொல்வது கூட சரியல்ல. அது மூன்று தனித்தனி கருவிகளின் தொகுப்பு. எந்திரத்தில் குறிப்பிட்ட சின்னத்தின் பொத்தானை அழுத்தியவுடன், விவிபாட் திரையில் சின்னம் தெரிகிறது. அங்கிருந்து கண்ட்ரோல் யூனிட்டில் அந்த வாக்கு பதிவாகிறது. அந்த வாக்கு அழுத்தப்பட்ட சின்னத்தின் கணக்கில் தான் போய் சேர்கிறது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

தேர்தலுக்கு முன், முதலில் விவிபாட் எந்திரத்தில் அந்த தொகுதியில் வேட்பாளர் பெயர், சின்னம். கட்சியின் பெயர் ஆகியவை பதிவேற்றம் செய்யப்படுகின்றன. பதிவு செய்யப்படும் வாக்குகளின் வரிசையில் ஒவ்வொரு மூன்றாவது ஓட்டு அல்லது ஐந்தாவது அல்லது ஏழாவது ஓட்டு, எந்த சின்னத்திற்கு விழுந்தாலும், அதை வேறொரு குறிப்பிட்ட சின்னத்திற்கு தரப்பட்ட வாக்காக பதிவாக்க முடியும் என்பதை அறிவியல் ஆய்வாளர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

வாக்குப்பதிவு இயந்திரமும் கண்ட்ரோல் யூனிட்டும் பிரிக்க முடியாதபடி ஒன்றிணைந்தவை அல்ல. கண்ட்ரோல் யூனிட்டை மாற்றி, தேர்தல் முடிவுகளை மாற்ற முடியும்.

இவற்றையெல்லாம் நவீன அறிவியல் முன்னேற்றத்தின் மூலம் தடுப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் கூறுகிறார்கள்.

ஒருவர் அளிக்கும் வாக்கு, அந்தச் சின்னத்தில் தான் விழுந்திருக்கிறது என்பதில் வெளிப்படைத்தன்மை இல்லை. வெளிப்படையாக இல்லாத எதன் மீதும் சந்தேகம் வரும்.

கடந்த ஜனவரி மாதம் 5ம் தேதி முதல் வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்துவதற்கு எதிராக உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் பானு பிரதாப் மற்றும் முகமத் பிரச்சா ஆகியோர் தலைமையில் குடிமைச் சமூகம் தொடர் போராட்டங்களை நடத்தி வருகிறது. இதில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்கின்றனர். இது ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதன் கட்டுபாட்டில் செயல்படும் தேர்தல் ஆணையத்தையும் பயமுறுத்துகிறது.

முன்னாள் தேர்தல் ஆணையர் குரோஷி இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திர முறை குறித்து கருத்து கேட்ட போது, முன்பு வாக்குப்பதிவு எந்திரங்கள் அனைத்தும் பாதுகாப்பிற்காக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது. இப்போது அது தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வெளியில் இருந்து ஹேக் செய்ய முடியும், மாற்றியமைக்க முடியும் என்று தெளிவாக கூறியிருப்பது, குற்றச்சாட்டுகளை மெய்யென நிரூபிக்கிறது.

ஆறு லட்சம் வாக்குப்பதிவு எந்திரங்கள் சரியாக இயங்கவில்லை என்றும், 19 லட்சம் இயந்திரங்கள் காணாமல் போய்விட்டதாகவும் சொல்லப்படுவது சந்தேகத்தை இன்னும் அதிகரிக்கின்றன.

முன்னர் வாக்கு சீட்டுகளைக் கொட்டிக் கலக்கி எண்ணிய போது, எந்த வாக்குச்சாவடியில், யாருக்கு, எத்தனை வாக்குகள் விழுந்தன என்ற விவரம் தெரியாது. இப்போது சாவடி வாரியாக யாருக்கு வாக்கு பதிவு ஆனது என்பது பகிரங்கமாக்கப்படுகிறது. இதுவும் ஜனநாயகத்துக்கு உகந்ததல்ல.

இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, இத்தாலி, அயர்லாந்து போன்ற நாடுகள், மின்னணு வாக்குப்பதிவு முறையைக் கைவிட்டு, மீண்டும் வாக்குச்சீட்டுகளில், கையால் முத்திரையிடும் முறைக்குத் திரும்பி விட்டன.

ஜெர்மனி நாட்டின் உச்ச நீதிமன்றம், வாக்குப்பதிவு எந்திரங்களைப் பயன்படுத்துவது அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று தீர்ப்பு எழுதி, அதனைத் தடை செய்திருக்கிறது.

வாக்குச்சீட்டுகளை எண்ணுவதற்கு கால தாமதம் ஆகிறது என்பது சொத்தைக் காரணம். ஐந்தாண்டு காலம் ஆளப்போகிற அரசைத் தேர்வு செய்வதற்கு, இரண்டு, மூன்று நாட்கள் வாக்கு எண்ணினால் ஒன்றும் குடி முழுகிப் போகாது.

தேர்தல் ஆணையம் நியாயமான, நம்பகத் தன்மை கொண்ட, வெளிப்படையான தேர்தலைத் தான் நடத்த வேண்டும்.

## 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீட்பு!?

# மோடி அரசின் பச்சைப் பொய்!




மு.வீரபாண்டியன்

மத்திய அரசின் சமூக பொருளாதார கொள்கைகளால் கடந்த 10 ஆண்டுகளில் நாடு முழுவதும் 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டதாக குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற கூட்டுக்குக் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

ஒன்றிய அரசு எழுதிக் கொடுப்பதைத்தான் அவர் படிக்கிறார். ஆனாலும் இது ஏற்க முடியாத பொய்யல்லவா?

சூதாட்ட அரங்கம், இதர கேளிக்கை விடுதிகளில் பணிபுரியும் எளிய மக்கள் வாழ்க்கை வேறு. புலம்பெயர் தொழிலாளர்கள், சிறிய தேசிய இனம் என அனைவரும் துயர் சூழல்தான். பணக்கார நாடுகளில், கல்வி, மருந்துவம், எட்ட முடியாத உயரம்.

அமெரிக்காவில், சுரங்கப்பாதையில், ஆலயங்களில், தெருவோரங்களில் ஒதுக்கப்பட்ட தொழிலாளருக்கு குடியிருப்பில் வாழும் மக்கள் நிலை மிகவும் பரிதாபம்.



25 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டார்கள் என்றால், எந்தெந்த மாநிலத்தில்? யார்யார்? அவர்கள் சமூக பொருளாதார பின்னணி இது குறித்து விவரங்கள் உண்டா?

தேசிய மாதிரி ஆய்வறிக்கைப் போல ஓர் அறிக்கையை முன் வைப்பாரா பிரதமர்?

இந்தியாவில் வறுமை ஒழிப்பிற்கான ஏராளமான திட்டங்கள் முன்மொழியப்பட்டன. வறுமையை ஒழிப்போம் "கரிபி ஹட்டோ" என நாடு முழுவதும் முழக்கங்கள் கேட்டன. விவசாயப் பசுமைப் புரட்சி, பால் உற்பத்தியில் வெண்மைப் புரட்சி, மீன்பிடித்தலில் நீலப் புரட்சி என் பல முயற்சிகளில் கூட வறுமை முற்றிலும் ஒழியவில்லை, ஒழிக்க முடியவில்லை.

இது முதலாளித்துவ சமூக அமைப்பில் தவிர்க்க இயலாத நியதி! சூறையாடும் மூலதன நியதி! உலக முதலாளிகளின் நியதி!

இங்கல்ல உலகின் கீழ்காணும் பணக்கார நாடுகளிலும் கூட வறுமை முற்றிலும் ஒழியவில்லை. ஒழிக்க முடியவில்லை. லக்சம்பர்க், சதார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நார்வே, அமெரிக்கா, ஐஸ்லாந்து, கனடா, ஆஸ்திரேலியா என எங்கேயும் வறுமை அடியோடு ஒழிக்க இயலவில்லை.

பணக்கார நாடுகளில் எண்ணெய், எரிவாயு, தங்கம் என அனைத்தும் தனியாரிடம் தான். அங்கு தொழிலாளர் குடியிருப்பு தரம் வேறு, வாழும் மக்கள் நிலை மிகவும் பரிதாபம்.

இச்சூழலில் இந்தியாவில் 10 ஆண்டுகளில் 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீட்டதாக குடியரசுத் தலைவரை பொய் உரைப்பது ஏற்கத்தக்கதல்ல.

25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீட்டால் 10 லட்சம் மக்கள் இஸ்ரேல் செல்ல விண்ணப்பிப்பது ஏன்? இஸ்ரேல் போர் சூழலில் அங்கு செல்ல அவசியம் என்ன? வறுமை தானே!

வட மாநில தொழிலாளர்கள் புலம்பெயர்வதேன்? பொருந்தாத பொய்களை குடியரசுத் தலைவர் மூலம் கூறுவது தான் வருத்தமளிக்கிறது.

இதனை பிரதமர் பேசலாம் உள்துறை அமைச்சர் பேசலாம் இது அவர்கள் இயல்பு!?

அமர்த்தியா சென் கூறுவது போல் செல்வம் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் குவியக்குவிய சுரண்டல், அபகரிப்பு அதிகரிக்கிறது எனப் பொருள்

முதலாளித்துவ மூலதன நலன்சார் திட்டங்கள் தான் நிறைவேற்றப்படும் மக்கள் நலன் சார் திட்டங்கள் மிக மிகக் குறைவு. நிலங்கள், உற்பத்தி சாதனங்களும் மூலதனம் என யாவும் தனியார் மய சூழலில் வறுமை ஒழிப்பு சாத்தியம் அல்ல

ரஷ்யாவில் எழுந்த யுகப்புரட்சிப் போல இந்திய மண்ணில் ஓர் புரட்சி இன்றி வெகுமக்கள் கிளர்ந்து எழும் கிளர்ச்சி இன்றி வறுமை ஒளியும் சாத்தியம் இல்லை புரட்சி யுகம் எழுக!

## இழிவான சூழ்ச்சிகள்

பாஜகவின் பதட்டம் தெளிவாக வெளிப்படுகிறது. பாஜக 400 இடங்களை வெல்லப் போவதாக தம்பட்டம் அடித்துக் கொண்டாலும் கூட, அமலாக்கத்துறை புலனாய்வுத் துறை போன்றவற்றை தவறாகப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை முடக்கி போட்ட முயல்வது,

அவர்களின் நம்பிக்கை யின்மையைக் காட்டுகிறது.

ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் கைது, ஆர்ஜேடி தலைவர் லாலுயாதவிடம் விசாரணை ஆகியவை இந்தியா கூட்டணியை மிரட்டுவதற்கான சமீபத்திய முயற்சிகள். இந்த இழிவான சூழ்ச்சிகளை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு தமது வாக்குச் சீட்டின் மூலம் பதிலளிப்பார்கள்!



## கார்ப்பரேட் விசுவாசம்

ஒன்றிய நிதி அமைச்சரின் இடைக்கால பட்ஜெட் உரை, சாமானிய மக்களின் அன்றாட வாழ்க்கையில் இருந்து அந்நியப்பட்டு நிற்கிறது. இந்திய பொருளாதாரம் ஏதோ வளமாக இருப்பது போன்ற தோற்றத்தை வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

கார்ப்பரேட் வரியைத் தொடர்ந்து குறைத்துக் கொண்டே இருப்பதன் மூலம், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசு தனது விசுவாசத்தை காட்டிக் கொண்டுள்ளது. இந்தியாவின் கடன் வரலாறு காணாத அளவுக்கு செங்குத்தாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில், சாதாரண மக்கள் அதிக பணவீக்கம் காரணமாக கடும் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏமாற்றம்.

டி. ராஜா



ம.இராதாகிருஷ்ணன்

**இன்று நாம் பயன்படுத்தும் இசலவை இயந்திரம் முதல் விமானங்கள் வரை, விண்வெளி ஆராய்ச்சி முதல் செயற்கை நுண்ணறிவு வரை என அனைத்தும் மின்னணு சாதனங்களையே சார்ந்து உள்ளன.**

# கார்ப்ரேட்களுக்கு ஒரு பில்லியன் டாலர் திட்டம்!

போரில் பயன்படுத்தப்படும் டாங்கிகளும், துப்பாக்கிகளும் கூட ட்ரோன்களுடன் சேர்ந்து இயக்கப்படும் வகையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ரேடார்கள் மற்றும் சாட்டிலைட்டுகள் மூலம் தகவல்களை பரிமாறிக் கொண்டு அதிநவீன வழியில் போர் நடத்தப்படுகிறது. உலகில் எந்த தொழிலைக் எடுத்துக்கொண்டாலும் சரி, எந்தவொரு சாதனங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, எல்லா மின்னனுச் சாதனங்களிலும் ''குறைக் கடத்திகளால் ஆன சிப்புகளே''(Semiconductorchips) மூளையாக செயல்படுகிறது.

இப்படி அனைத்து தொழில்களுக்கும் அடிப்படையாக இருக்கும் மின்னனுத்துறையில், ஒரு நாட்டின் எதிர்கால வளர்ச்சி என்பது அந்நாடு கொண்டுள்ள குறைக்கடத்தி சிப் தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தை பொருத்து உள்ளது எனலாம். அப்படியான சிப் தயாரிப்பு தொழிற்சாலை ஒன்று பஞ்சாப் மாநிலத்தின் மொஹாலியில் செமிகண்டக்டர் லேப் (எஸ்சிஎல்) உள்ளது. இது இந்திரா காந்தியின் கனவு திட்டம் ஆகும்.

இந்தியாவில் தற்போது இருக்கும் ஒரே சிப் உற்பத்தி தொழிற்சாலை, அதுவும், அரசுக்கு சொந்தமான தொழிற்சாலை தான். இந்த Semiconductor Laboratory. இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது சீனா, தைவான் ஆகிய நாடுகளுக்கு முன்னோடியாக இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது.

இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட சிப் தான் சந்திரயான் போன்ற விண்வெளி ஆய்வு திட்டங்கள், பாதுகாப்புத் துறை திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் சிப்கள் அனைத்தும் அரசு திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

மேலும் இந்து நிறுவனம் இஸ்ரோவின் கீழ் இயங்கி வருகிறது. இந்திரா காந்தி திட்டமிட்டது போல் நடந்திருந்தால் இந்தியா தான் உலக நாடுகளுக்கே சிப் சப்ளையராக இருந்திருக்க வேண்டும்.

48 ஆண்டுகள் பழமையான இந்திரா காந்தி காலத்தில் துவங்கிய ஷிசிலி நிறுவனத்தை நவீனமயமாக்கி புதுப்பிக்கப் போவதாக ஒன்றிய அரசு சுமார் 1 பில்லியன் டாலர் அளவிலான நிதியை ஒதுக்கியுள்ளது.

தற்போது ஷிசிலி நிறுவனம், இஸ்ரேல் நாட்டின் டவர் செமிகண்டக்டர் உதவியுடன் தற்போது 180 நேனோமீட்டர் சிப் தயாரிக்கப்படுகிறது. ஆனால் தற்போது சந்தையில் அதிகமாக 6 நேனோமீட்டர், 7 நேனோமீட்டர் சிப் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு செமிகண்டக்டர் சிப்பும் அதன்




பயன்பாட்டையும், தேவையைப் பொருத்து மாறும்.

செமிகண்டக்டர் சிப் தயாரிப்பு நவீன அறிவியல் தொழில்நுட்பத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது. பாதுகாப்புத் துறை உற்பத்தியை அதிகரிக்கவும் இது உதவும். எனவே நாட்டில் உள்ள ஒரே ஒரு சிப் தயாரிப்பு நிறுவனமான ஷிசிலி நவீனமயமாக்கல் அவசியமான ஒன்று ஆகும். நாட்டின் தொழில் நுட்ப பலத்தை அதிகரிக்கும். ஆனால் கார்ப்பரேட்களுக்கு ஆதாயம் இல்லாமல் மோடி அரசு எந்த திட்டத்தையும் அறிவிக்காதல்லவா!

ஆமாம் , டாடா குழுமம், இஸ்ரேலிய பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனமான டவர் செமிகண்டக்டர் மற்றும் அமெரிக்க டெக்சாஸ் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களிடமிருந்து, மாற்றியமைப்பதற்காக ஒன்றிய அரசாங்கம் ஒன்பதுஏலவிண்ணப்பங்களைப்பெற்றுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கு முன்னர் அமெரிக்கா சென்ற மோடி குஜராத்தில் சிப் தயாரிப்பு நிறுவனம் அமைக்க மைக்ரான் நிறுவனத்துடன் அமெரிக்க அதிபர் முன்னிலையில் ஒப்பந்தம் செய்தது அறிந்ததே.

அந்த ஒப்பந்தம் குறைக் கடத்தி சிப் தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்கான முயற்சி என்று சொல்லி, கடைநிலை தொழில்நுட்பங்களை வாங்கிக்கொண்டு அதற்கு கடைநிலை வேலைகளை செய்து கொடுப்பதை இந்தியாவின் வளர்ச்சி என்று மோடி அரசு பீற்றிக்கொண்டது. மைக்ரான் சிப் தொழிற்சாலை மற்றும் நிணிபிகிலி ஒப்பந்தத்தில் இதுதான் நடந்தது.

மைக்ரான் ஒப்பந்தத்தின் மூலம் அந்நிறுவனம் குஜராத்தில் அமைக்கப்போகும் சிப் தொழிற்சாலையில் இத்தொழில்நுட்பத்தின் மிக முக்கிய பகுதியான சிப் வடிவமைப்பு மற்றும் உருவாக்கம் (Design & Fabrication) ஆகியவற்றை செய்யப்போவதில்லை. அத்தொழிநுட்பங்களை இந்தியாவிற்கு வழங்கப்போவதும் இல்லை.

சிப்புகளில் பழுது இருக்கிறதா? என சோதனை செய்வது, சிப்புகளை றிசிஙி யில் பொருத்துவது, சிப்புகளை எந்தவித புறச்சேதாரமும் இல்லாமல் பேக்கிங் செய்வது என்ற கடைநிலை பிரிவுகளை செய்வதற்குத் தான் மைக்ரான் நிறுவனம் குஜராத்தில் தன் ஆலையை அமைக்கவிருக்கிறது

மைக்ரான் தனது சிப் வடிவமைத்தல் மற்றும் உருவாக்கம் என்ற தொழில்நுட்ப திறன்களை கொண்டு அமெரிக்கா மற்றும் சீனா போன்ற நாடுகளில் உற்பத்தி செய்த சிப்புகளை வெறுமனே அசெம்பிளி, பேக்கேஜிங் மற்றும் டெஸ்டிங் போன்றவற்றிற்காக மட்டுமே இந்த குஜராத் ஆலை அமையப் போகிறது.

இது போன்ற கடைநிலை சிப் தொழிலுக்கான சந்தையில் 13 விழுக்காடு அளவில் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ள மலேசியா, சிப் தொழில்நுட்பத்தில் இந்தியாவை விட வெகு தூரம் முன்னேறி உள்ளது. மைக்ரான் நிறுவனம் சிப் தொழில்நுட்பத்தின் கடைநிலை வேலைகளை, மலேசியா இந்தியா என இரு நாடுகளுக்கு மாற்றுவதன் மூலம் தனது விநியோகச் சங்கிலிக்கு எந்த ஆபத்து நேராமல் பார்த்து கொள்ள முயல்கிறது..

அதே சமயத்தில் உயர்ந்த தொழில்நுட்பமான சிப் வடிவமைத்தலை ஊக்குவிப்பதற்காக வாஷிடங்கனில் 100 பில்லியன் டாலர் முதலீட்டில் புதிய ஆலையை அமைக்கவிருக்கின்றன அமெரிக்க சிப் நிறுவனங்கள். இப்படி சிப் உற்பத்தியில் கடைநிலை வேலை செய்வதற்கான ஒரு தளமே இந்திய குஜராத் ஆலை.

மைக்ரானின் குஜராத் ஆலையை அமைப்பதற்கான மொத்த செலவு 2.75 பில்லியன் டாலர் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 50 விழுக்காட்டுத் தொகையை ஒன்றிய மோடி அரசு மானியமாக வழங்கிடும். இவ்வாறு மானியமாக அளிக்கப்படும் தொகையே 11 ஆயிரம் கோடி ரூபாய்களாகும். மீதம் உள்ள தொகையில் 20 விழுக்காட்டுத் தொகையை பாஜக ஆளும் குஜராத் மாநில அரசு அளித்திடும்.

மைக்ரான் நிறுவனமோ, வெறும் 825 மில்லியன் டாலர் (30 விழுக்காடு) அளவில் மட்டுமே இந்த ஆலைக்காக செலவு செய்து, 2.75 டாலர்கள் மதிப்பில் அமைக்கப்படும் தொழிற்சாலை முழுவதையும் தன் உடைமையாக ஆக்கி கொள்கிறது என்பதும் அறிந்ததே.

ஏற்கனவே இருக்கும் ஷிசிலி ஐ தாரை வார்க்கப் போவது, இஸ்ரேல் நிறுவனத்துக்கோ அல்லது அமெரிக்க நிறுவனத்துக்கோ யாரறிவார்? புதிதாக குஜராத்தில் உருவாக்குவதாக தம்பட்டம் அடித்து அமெரிக்க அடிமை சேவகம் செய்தது நினைவில் கொள்வோம்.

நாட்டுக்கு சாபம் மோடி ஆட்சி. அதனை வீட்டுக்கு அனுப்புவதே விடியலுக்கு உதவும்.

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

அமைப்பாக இருக்க முடியும்?.

ஆர்.எஸ்.எஸ். கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களே இனி தேர்தல் ஆணையமாக செயல்பட முடியும், செயல்பட்டாக வேண்டும் என்ற நிலையை சட்டபூர்வமாக மோடி அரசு உருவாக்கி விட்டது.

இப்படி உருவாகிவிட்ட நிலைமையில், தேர்தல் ஜனநாயக முறைப்படி நடைபெறுமா?

எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்ற மாநிலங்களில், எதிர்க்கட்சிகளை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கியும், வருமானவரித்துறை, அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை தவறாக பயன்படுத்தி அச்சுறுத்தியும், வெற்றி பெற்றவர்களை ஆட்சி அமைக்க அனுமதிக்காமல், பாஜகவே ஆட்சி அமைத்ததை அனைவரும் நன்கறிவோம்!.

டெல்லி மாநகராட்சி தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி பெரும்பான்மை உறுப்பினர்கள் வெற்றி பெற்ற போதும், மேயரை தேர்ந்தெடுக்க முடியவில்லை.

மேயர் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டு, மேயரை தேர்வு செய்யாமல், பலமுறை மேயருக்கான தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது.

உச்சநீதிமன்றம் தலையிட்டதால், வேறு வழியின்றி மேயர் தேர்தல் நடைபெற்று, ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்தவர் மேயர் ஆனார்.

அண்மையில் பஞ்சாப், சண்டிகர் இரு மாநிலங்களுக்கும் தலைநகரமாக விளங்கக்கூடிய, சண்டிகர் மாநகராட்சிக்கான தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் மொத்தம் உள்ள 36 இடங்களில், 20 வாக்குகளை காங்கிரஸ் மற்றும் ஆம் ஆத்மி வெற்றி பெற்றது. பாஜக வெறும் 16 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

மேயர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ், ஆம் ஆத்மி கூட்டணியாக களம் கண்டு, ஆம் ஆத்மியை சேர்ந்தவர் மேயருக்கு போட்டி யிட்டார். எதிர்த்து பா.ஜ.க . போட்டியிட்டது.

ஆம் ஆத்மி வேட்பாளர் 20 வாக்குகளை பெற்றார். ஆனால் தேர்தல் அதிகாரி 20 வாக்குகளில் எட்டு வாக்குகளை செல்லாது என்று அறிவித்து, பாஜக வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவித்தார். அதிகாரி அவ்வாறு அறிவித்த அடுத்த நொடியே, பாஜக வேட்பாளர் மேயர் நாற்காலியில் அமர வைக்கப்பட்டார்.

இதுதான் மோடி அமித்ஷா கூட்டணி ஜனநாயகம்.

வென்றவர் தோற்றார், தோற்றவர் வென்றார். இத்தகைய கேடுகெட்ட ஜனநாயகத்தைத் தான் மோடி, அமித்ஷா கூட்டணி உருவாக்கியுள்ளது. இதை தான் நாடாளுமன்றத் தேர்தலில் பின்பற்றப் போகிறதா? என்கிற ஐயப்பாடு மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

நடைபெற இருக்கின்ற தேர்தல் நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்டப் போகிறதா?

அல்லது மோடி அமித்ஷா கூட்டணியின் ஜனநாயகத்தை நிலைநாட்ட உள்ளதா?

இவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இனி தேர்தலே இருக்காது, எதிர்க்கட்சிகளே இருக்காது என்பது ஒரு புறம் இருக்கட்டும். நடைபெறப் போகும் நாடாளுமன்ற பொது தேர்தல் ஜனநாயக முறையில் நடைபெறுமா? என்பதே இன்று பெரும் கேள்வியாக எழுந்துள்ளது.

ஜனநாயகம் நிலை நிறுத்தப்பட வேண்டும் என விரும்புவோர் அனைவரும், ஜனநாயகத்தின் மீது அக்கறை உள்ளோர் அனைவரும், ஜனநாயகத்தை காக்கும் ஒரு பெரும் போரில் ஈடுபட்டுள்ளோம். பாசிச சக்திகளுக்கு எதிரான ஒரு மகத்தான போரில் ஈடுபட்டுள்ளோம் என்பதை நன்குணர்ந்து களம் காண வேண்டும்!.

ஜனநாயக முறையில் நாடாளுமன்ற பொது தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்திட வேண்டும்.

அதற்கான ஆயத்த பணிகளை மேற்கொள்வோம்.

போராட்டத்தை உணர்ந்து உணர்வுபூர்வமாக செயல்படுவோமாக!

மீண்டும் சந்திப்போம்!

வணக்கம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



வ.மணிமாறன்

# திரை பிம்பமே ஆட்சியைப் பிடிக்க முதலீடு! நடிகர் விஜய் நினைப்பது நடக்குமா?

**நடிகர் விஜய் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜயாக மாறி பிப்ரவரி இரண்டாம் தேதி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் "தமிழக வெற்றி கழகம் என்கிற பெயரில் எமது தலைமையிலான அரசியல் கட்சி துவங்கப்பட்டு இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்ய எமது கட்சியின் சார்பில் இன்று விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார்.**



தமிழ் திரையுலகின் முன்னணி நட்சத்திரமாக இருக்கும் விஜய், தமது அரசியல் பயணத்தை தொடங்கியுள்ளார். நடிகர் ரஜினிகாந்த் போன்று, இப்பொழுது வருகிறேன், அப்பொழுது வருகிறேன் என்று இழுக்காமல் அரசியல் பயணத்தை தொடங்கி விட்டார். அதற்கான விளக்கங்களை அந்த அறிக்கையில் விஜய் குறிப்பிட்டுள்ளார். அறிக்கையில் உள்ள எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் போன்றவற்றை சுட்டிக்காட்டி சமூக ஊடகங்களில் பலர் விமர்சித்து வருகின்றனர். நாம் அவற்றைக் கடந்து அலசிப் பார்ப்போம்.

விஜய், தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரம். பெரும் தொகையை சம்பளமாக பெற்றுக் கொண்டிருப்பவர். ரசிகர் பட்டாளம் மிகுந்தவர். திரைப்பட நடிகர்களில் புகழும் செல்வாக்கும் மிகுந்தவர். இவையெல்லாம் மிகுந்திருக்கும் காலத்திலேயே அரசியலில் அடி எடுத்து வைக்கிறார்.

திரைப்படங்களின் மூலம் ஈட்டிய புகழையும் பிம்பத்தையும் (இமேஜ்) அரசியலுக்கு மடைமாற்றி அதிகாரத்தை பெற வேண்டும் என நடிகர் விஜய் விரும்புகிறார். இதை தம்முடைய அறிக்கையில் தெளிவாக குறிப்பிடுகிறார். "அரசியல் எனக்கு பொழுதுபோக்கு அல்ல. அது என் ஆழமான வேட்கை. அதில் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவே விரும்புகின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

திரைப்படங்களின் மூலம் கிடைத்த புகழை, அந்த நடிகரின் அரசியல் செல்வாக்காக மாற்றுவதையே பிம்ப அரசியல் (இமேஜ் பாலிடிக்ஸ்) என்கின்றனர். இந்த பிம்ப அரசியல் தமிழ்நாட்டுக்குப் புதியது அல்ல.

எம்ஜிஆர் என்ற திரைப்பட நடிகர் புரட்சித் தலைவராக, முதலமைச்சராக பரிணமித்த வரலாறு உண்டு. அவரை அடியொற்றி ஜெயலலிதா அதிகாரம் செலுத்தினார். இதேபோன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ஆர், பாக்யராஜ், டி.ராஜேந்தர், கார்த்திக், சரத்குமார், கருணாஸ், விஜயகாந்த், கமல்ஹாசன், சீமான் என நீண்ட பிம்ப அரசியல் தமிழ்நாட்டில் உண்டு.

எம்.ஜி.ஆர் பிம்ப அரசியலின் முன்னோடி. அவரைப் போன்று திரைப்படப் புகழுடன், வள்ளல் தோற்றம்; ரசிகர் மன்றங்களின் கட்டமைப்பு போன்றவற்றை உருவாக்கி விட்டால், அரசியலில் குதித்து முதலமைச்சர் பதவியை பிடித்து விட முடியும். அதிகாரத்தை சுவைக்க முடியும் என முன்னணி நடிகர்கள் கனவு காண்கின்றனர். அதனை செயல்படுத்தவும் முயல்கின்றனர்.

நடிகர் விஜய்க்கும் இப்படிப்பட்ட கனவு உண்டு. அதற்காக ரசிகர் மன்றங்களை வலுவாக கட்டமைத்ததுடன், அவற்றை விஜய் மக்கள் இயக்கமாக 2009 ஆம் ஆண்டே மாற்றினார்.

"விஜய் மக்கள் இயக்கம் பல வருடங்களாக தன்னால் இயன்ற வரையில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களையும், சமூக சேவைகளையும், நிவாரண உதவிகளையும் செய்து வருவது நீங்கள் அனைவரும் அறிந்ததே" என்று அறிக்கையின் தொடக்கத்திலேயே சுட்டிக்காட்டியுள்ளார். நடிகர் விஜய் அரசியல் கட்சி தொடங்க முடிவெடுத்ததற்கும் தற்போது தொடங்கி இருப்பதற்கும் பின்வரும் காரணங்களை கூறுகிறார்.

"எனக்கு பெயர், புகழ் மற்றும் எல்லாமும் கொடுத்த தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழ் சமுதாயத்திற்கும் என்னால் முடிந்த வரையில் இன்னும் முழுமையாக உதவ வேண்டும்" என்றும், "2026 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்கள் விரும்பும் அடிப்படை அரசியல் மாற்றத்திற்கு வழி வகுப்பது தான் நமது இலக்கு" என்றும் கூறுகிறார்.

தனக்குப் பெயர், புகழ் மற்றும் எல்லாம் கொடுத்த மக்களுக்கு விஜய் செய்வது, கட்சி தொடங்கி, முதலமைச்சராவதுதான். அதாவது, தன்னையும், தன் திரைபிம்பத்தையும் முதலீடு செய்து ஆட்சிக்கு வரவேண்டும் என விஜய் நினைக்கிறார். அவர் மட்டுமல்ல, முன்னணி நடிகர்கள் அனைவருமே இப்படித்தான் நினைக்கின்றனர். ஆனால், இதுதான் அரசியல். இதுதான் ஜனநாயகம் என்று கருதுவது தவறானது. பிழையானது.


தமிழக வெற்றி கழகம்

பிளாட் எண்: 275, சீஷோர் டவுன், 6வது அவென்யூ, பனையூர், சென்னை - 600119.

விஜய்
தலைவர்
தமிழக வெற்றி கழகம்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!

Date : 02.02.2024

அன்பான தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும், என் பணிவான வணக்கங்கள்.

"விஜய் மக்கள் இயக்கம்" பல வருடங்களாக தன்னால் இயன்ற வரையில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களையும், சமூக சேவைகளையும், நிவாரண உதவிகளையும் செய்துவருவது நீங்கள் அனைவரும் அறிந்ததே. இருப்பினும், முழுமையான சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களை கொண்டுவர ஒரு தன்னார்வ அமைப்பினால் மட்டும் இயலாத காரியம். அதற்கு அரசியல் அதிகாரம் தேவைப்படுகிறது.

தற்போதைய அரசியல் சூழல் பற்றி நீங்கள் அனைவரும் அறிந்ததே. நிர்வாக சீர்கேடுகள் மற்றும் "ஊழல் மலிந்த அரசியல் கலாச்சாரம்" ஒருபுறம் என்றால், நம் மக்களை சாதி மத பேதங்கள் வாயிலாக பிளவுபடுத்த துடிக்கும் "பிளவுவாத அரசியல் கலாச்சாரம்" மறுபுறம், என்று இருபுறமும் நம் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்குமான முட்டுக்கட்டைகள் நிறைந்துள்ளன. ஒரு தன்னலமற்ற, வெளிப்படையான, சாதிமத பேதமற்ற, தொலைநோக்கு சிந்தனை உடைய, லஞ்ச-ஊழலற்ற திறமையான நிர்வாகதிற்கு வழிவகுக்ககூடிய அடிப்படை அரசியல் மாற்றத்திற்காக குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை. மிக முக்கியமாக, அத்தகைய அரசியல், நம் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு உட்பட்டு, தமிழ் நாட்டின் மாநில உரிமைகள் சார்ந்து, இந்த மண்ணுக்கேற்ற "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" ( பிறப்பால் அனைவரும் சமம் ) என்கிற சமத்துவ கொள்கைபற்று உடையதாகவும் இருக்க வேண்டும். அத்தகைய அடிப்படை அரசியல் மாற்றத்தை மக்களின் ஏகோபித்த அபிமானமும், அன்பும் பெற்ற முதன்மையான ஒரு மக்கள்சக்தியால் தான் சாத்தியப்படுத்த முடியும்.

பொதுவாக, கதாநாயகர்களுக்கு திடீரென பணமும் புகழும் கிடைத்தவுடன் அவர்கள் பிரமித்துப் போகிறார்கள். ஒன்று, இந்தப் பணம், புகழ் அனைத்தும் கடவுளின் அருளால் கருணையால் தனக்கு கிடைத்திருப்பதாக மூடநம்பிக்கை கொள்கின்றனர். இரண்டாவதாக, மேலும் மேலும் முன்னேறுவதற்கான திறமையும் அதீத சக்தியும் அதிர்ஷ்டமும் தனக்கு இருப்பதாக பிரமை கொள்கின்றனர். இதனால் பணம், புகழ் கிடைத்தவுடன், அரசியல் பதவி என்னும் அதிகாரத்தை எளிதாக எட்டிப் பிடித்து விடலாம் என நம்புகின்றனர்.

நடிகர் ரஜினிகாந்த் முதல் தற்போது கட்சி தொடங்கியிருக்கும் விஜய், கட்சி தொடங்க இருக்கும் விஷால் வரை இதனைத் தான் வெளிப்படுத்துகின்றனர்.

நாட்டில் எவ்வளவோ எரியும் பிரச்சினைகள் இருக்கின்றன. இன்று நாடாளுமன்ற ஜனநாயக கவசத்துக்குள் பாசிசம் கோலோச்சுகிறது. கூட்டாட்சி என்பதையெல்லாம் வீசி எறிந்து விட்டு வெறும் நிர்வாக அலகுகளாக மாநிலங்களை மாற்ற ஒன்றிய அரசு துடித்துக் கொண்டிருக்கிறது. ஆளுநர்களின் அரசியல் தலையீடும், அமலாக்கத்துறை போன்ற புலனாய்வு அமைப்புகளின் அரசியல்ரீதியான பயன்பாடும் எல்லையற்று போய்க்கொண்டிருக்கிறது. மூன்றாவது முறையாக பாஜக ஆட்சியமைத்தால் மக்களாட்சி தொடருமா என்பதே ஐயம் என்கிறார் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுனா கார்கே.

இப்படி பல்வேறு அரசியல் பிரச்சனைகளின் கூர்முனையாக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் இருக்கிறது. ஆனால், இந்த அரசியல் எதார்த்தம் பற்றி எதுவும் பேசாமல், 2026 சட்டமன்றத்தேர்தலில் போட்டியிட்டு ஆட்சி அமைக்க விஜய் நினைக்கிறார். எப்படி சாத்தியம்?

ஆனால், அறிக்கையின் பல்வேறு இடங்களில் அடிப்படை அரசியல் மாற்றம் பற்றி விஜய் பேசுகிறார். "முழுமையான சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களை கொண்டு வர ஒரு தன்னார்வ அமைப்பினால் (விஜய் மக்கள் இயக்கம்) மட்டும் இயலாத காரியம்." என்று கூறும் விஜய், "தன்னலமற்ற, வெளிப்படையான, சாதி மத பேதமற்ற, தொலைநோக்கு சிந்தனை உடைய, லஞ்ச ஊழலற்ற, திறமையான நிர்வாகத்திற்கு வழிவகுக்கக் கூடிய.." என்பதையே அவர் அடிப்படை அரசியல் மாற்றம் என்கிறார்.

நடிகர் விஜய்யின் மேலோட்டமான இந்த பார்வைக்கும் இன்றைய அரசியல் எதார்த்தத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது.

விஜய் போன்ற நடிகர்களின் அரசியல் இல்லாத அதிகாரத்தை நோக்கிய நகர்வுக்கு, பெரும்பாலும் அரசியல் உணர்வும் அரசியல் புரிதலும் இல்லாத இளைஞர்கள் தான் அடித்தளமாக உள்ளனர். அதாவது களத்தில் உள்ள அரசியல் கட்சிகளால் பெரிய ஈர்ப்பையோ செல்வாக்கையோ செலுத்த முடியாத இளைஞர்கள் அடித்தளமாக உள்ளனர். அவர்களிடம் "உங்கள் நடிகர் ஏன் அரசியலுக்கு வருவதாகச் சொல்கிறார்? அவர் என்ன செய்து விடுவார்?" என்ற சாதாரண கேள்விக்கு கூட சரியான பதில் இல்லை. ஆனால் "யார்யாரோ அரசியலுக்கு வரும்போது எங்கள் நடிகர் மட்டும் வரக் கூடாதா?" என்ற எதிர்க் கேள்விதான் அவர்களின் பதிலாக வருகிறது.

தங்களுக்குப் பிடித்த நடிகருக்காக அரசியலில் அடியெடுத்து வைக்கும் அந்த இளைஞர்கள், சமூகத்தையும் அரசியலையும் கவனிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது அவற்றுக்கு எதிர்வினை ஆற்ற வேண்டிய கட்டாயம் உருவாகிறது. இதன் மூலம் சமூகத்தில் அரசியல் பேசுவோர் எண்ணிக்கை அதிகரிக்கும்.

அவர்கள் தமிழ்நாட்டின் வரலாற்றையும், தமிழ் சமூகத்தை வளர்த்தெடுத்த தலைவர்களையும் பற்றி கற்றுக் கொள்வார்கள். விஜய் போன்ற நடிகர்கள் தொடங்கும் கட்சிகளின் வரம்பு குறித்தும் தெளிவு பெறுவார்கள்.

அதேநேரத்தில், திரைப்பட நடிகர்களை ரசிப்பதன் வரம்பையும், எதார்த்தத்தில் சமூக அரசியல் செயல்படும் விதத்தைப் பற்றியும் முற்போக்கு பண்பாட்டு அமைப்புகள் அவர்களிடம் உரையாடலை மேற்கொள்ள வேண்டும்.

தொடர்புக்கு: 9500001224

---

## பழைய ஜனசக்தி இதழ்கள் மின்னாக்கப் பணி தொடக்கம்!

தூத்துக்குடியிலுள்ள வ.உ.சி., பாரதி மின்நூலகம் ஆய்வு மையத்தில் "நியூஏஜ், ஜனசக்தி", மின்னாக்கப் பணியை சிபிஐ தூத்துக்குடி மாநகரச் செயலாளர் எஸ்.பி.ஞானசேகர், சிபிஐ தாளமுத்துநகர் கிளைச் செயலாளர் சௌந்திரராஜன் திரளான தோழர்கள், ஆய்வு மாணவர்கள், வாசகர்கள் மத்தியில் துவக்கி வைத்துப் பேசினார்.

---

## புதுக்கோட்டை எஸ்.ராஜசேகரன் மறைவு!

### இரா.முத்தரசன் இரங்கல்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கை:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் எஸ்.ராஜசேகரன் (84) 31.01.2024 அன்று வடக்கு குலமங்கலத்தில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்ற துயரச்செய்தி மிகுந்த வேதனை அளித்தது.

எஸ். ராஜசேகரன் சிறு வயதில் இருந்தே கம்யூனிஸ்டு இயக்கத்தால் ஈர்க்கப்பட்டவர். ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் கட்சியின் மாவட்டச் செயலாளராக இருந்த மூத்த தலைவர் எம்.மாசிலாமணியின் வழிகாட்டலில் கட்சியின் கிளைச் செயலாளர், இடைக்குழு செயலாளர் பணியாற்றி, தஞ்சை மாவட்டக் குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம் அமைந்த பிறகு, மாவட்ட கட்சியில் முன்னோடியாக திகழ்ந்த எஸ்.ராஜசேகரன் மாவட்டச் செயலாளர் பொறுப்பிற்கு தேர்வு செய்யப்பட்டு சிறப்பாக பணியாற்றினர்.

கடந்த 1996 ஆம் ஆண்டு தேர்தலில் ஆலங்குடி தொகுதியில் போட்டியிட்டு குறைந்த வாக்குகளில் வெற்றி வாய்ப்பை இழந்த எஸ்.ராஜசேகரன் 2006 தேர்தலில் வெற்றி பெற்று, 2011 ஆம் ஆண்டுவரை சட்டமன்ற உறுப்பினராக செயல்பட்டவர்.

சிலமாதங்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், முதுமை காரணமாக காலமாகி விட்டார். இவருக்கு ஜீவபாரதி என்கிற மகனும், கல்பனா என்ற மகளும் இருக்கிறார்கள். அன்னாரது மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறது.

# இராமாயணத்தை மறுக்கும் தொல்லியல், வரலாற்றுச் சான்றுகள்

1



சுந்தரசோழன்

**இராமர் கோவில் என்ற ஒரு கட்டமைப்பை முன்வைத்து மக்களை மதவாத மாயையில் மூழ்கடிக்க இந்துத்துவப் பாசிசம் வெறித்தனமான பரப்புரையை மேற்கொண்டு வருகிறது. எனினும் ராமன் என்னும் ஒரு நபர் உண்மையில் வாழ்ந்தாரா? என்பது கூட விஞ்ஞானபூர்வமாக நிறுவப்படவில்லை.**

அப்படி ஒருவர் உண்மையில் வாழ்ந்தார் என்றால் கூட அவர் எந்தக் காலத்தில் உலகின் எந்தப் பகுதியில் வாழ்ந்தார், இந்துப் பழமைவாதிகள் குறிப்பிடும் ராமன் என்னும் கடவுளுக்கும் அவருக்கும் என்ன தொடர்பு எனப் பல கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டியுள்ளது.

இராமாயணம் என்னும் காவிய நூல் இராமனைப் பற்றிய தகவல்களை அளிக்கிறது. இந்தியாவில் மட்டும் முன்னூறுக்கும் மேற்பட்ட இராமாயணங்கள் உள்ளன என்பது ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப் பட்டுள்ள ஒன்று. அவற்றில் ஜைன இராமாயணம் மற்றும் பவுத்த இராமாயணம் ஆகியவை முக்கியமானவை. வால்மீகி இராமாயணம் சீதையை இராமனின் மனைவி என்னும் போது வேறொரு இராமாயணம் சீதையை இராமனின் சகோதரி என்கிறது.

பழமைவாத இந்துக்கள் வால்மீகி இராமாயணத்தையே வெகுவாக ஏற்றுக் கொள்வது வழக்கம். இது ஒரு ஆதி காவியம் என்பதாக மட்டுமின்றி புராண இதிகாசமாகவும் போற்றப்படுகிறது.

ஆனால் இத்தகைய இராமாயணத்தின் காலம் குறித்து நம்பகமான தகவல்கள் ஏதும் கிடையாது என்பது வியக்கத் தக்கதே. பழமைவாத இந்து நம்பிக்கையானது இராமாயண நிகழ்வுகள் திரேதாயுகத்தில் நடைபெற்றவை எனக் கூறுகிறது. சில இந்துமத நம்பிக்கையாளர்கள் இராமாயண நிகழ்வுகள் இன்றைக்குச் சுமார் 75 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றவை எனக் கூறுகின்றனர். இன்னும் சில ஆய்வாளர்கள் அது கி.மு. 1400 காலத்தைச் சேர்ந்தது எனக் கூறுகின்றனர்.

ஆனால் இவர்கள் யாருமே தனது வாதத்திற்கு ஆதரவாக, அதனை உறுதிபட நிறுவிடும் சான்றுகள் எதையும் முன்வைக்கவே இல்லை என்பதே உண்மை.

இராமாயணம் குறித்து இத்தனை குழப்பங்கள் உள்ள போது, இதன் உண்மைத் தன்மையைப் புரிந்து கொள்ளத் தொல்லியல் மற்றும் வரலாற்றுத் தரவுகளின் துணையை நாடுவதே சரியானதாக இருக்கும்.

பழமைவாத இந்துக்களால் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படும் வால்மீகி இராமாயணக் கதையின் படி ராமனும் அவனது குடும்பத்தினரும் அயோத்தியில் அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான தனித்தனி மாளிகைகளில் வாழ்ந்தனர். அம்மாளிகைகள் குறித்தும், அதன் பிரமிக்க வைக்கும் பிரம்மாண்டம் குறித்தும் இராமாயணத்தில் பல குறிப்புகள் உண்டு.

அவர்கள் ஒரு நகர நாகரீகத்தில் வாழ்ந்தனர் என்றும் அது கூறுகிறது. பயணம் செய்வதற்கும் போர்களுக்கும்



அவர்கள் குதிரைகள் மற்றும் தேர்களைப் பயன்படுத்தினர் என்றும் அக்கதை மாந்தர்கள் பங்கேற்ற போர்கள் குறித்தும் இராமாயணம் மிகப் பல முறை குறிப்பிடுகிறது.

அப்படியானால், இராமாயணக் கதை உண்மையானதாக இருப்பின், அது தவிர்க்கவியலாதவாறு ஏராளமான தொல்லியல் சான்றுகளை விட்டுச் சென்றிருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

இராமாயணக் காவியம் அரங்கேறியதாகக் கூறப்படும் அயோத்தியா நகரின் மாபெரும் மாளிகைகள், அதன் நகரக் கட்டமைப்பு, அதனுடன் தொடர்புடைய சித்ரகூடம் உள்ளிட்ட இடங்கள் என அது ஒரு தொல்லியல் புதையலாக இருக்க வேண்டும்.

இது பற்றிய உண்மையைக் கண்டறியும் நோக்கத்துடன் கடந்த நூறாண்டுகளுக்கும் மேலாக, இன்றைய அயோத்தியில் மட்டுமின்றி இராமாயணத்துடன் தொடர்புடைய பல இடங்களிலும் வெவ்வேறு காலங்களில் பல தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையின் தந்தையாகக் கருதப்படும் அலெக்சாந்தர் கன்னிங்ஹாம், 1862–63ஆம் ஆண்டுகளில் அயோத்தியில் தொல்லியல் அகழ்வாய்வுகளை மேற்கொண்டார். இந்த ஆய்வுகளில் இராமாயணத்துடன் தொடர்பு படுத்தக் கூடிய மிகப் பழமையான கட்டுமானங்கள் எதையும் கண்டதாக அவர் குறிப்பிடவில்லை.

1889 –91 காலகட்டத்தில் அங்கு இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறை சார்பில் அங்கு அகழ்வாய்வு மேற்கொண்ட அலோய்ஸ் அண்டன் ஃப்யூரர் என்பவரும் இந்நகரை இராமாயணத்துடன் தொடர்பு படுத்தக் கூடிய எந்த இடிபாடுகள் அல்லது கட்டுமானங்களைக் காணவில்லை. மாறாக, அங்கு பல பவுத்தக் கட்டுமானங்கள் இருந்ததையே அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய விடுதலைக்குப் பின்னர் 1969 – 70ஆம் ஆண்டுகளில் பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அவத் கிஷோர் நாராயண் என்பவர் அயோத்தியாவில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டார். அவர் இன்றைய அயோத்தியா நகரம் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் தான் நிர்மாணிக்கப்பட்டது எனக் கூறினார்!! மேலும் அங்கு சமண மதத்தின் தாக்கம் தான் அதிகம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார் என்பது கவனிக்கத் தக்கது.

தொல்லியல் ஆய்வுத்துறைத் தலைவராக இருந்த பி.பி. லால் என்பவர், 197585ஆம் ஆண்டுகளில் இராமாயணத்துடன் தொடர்புடைய அயோத்தியா உள்ளிட்ட இடங்களில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டார். அவரது ஆய்வு முடிவுகள் அச்சமயத்தில் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. தொல்லியல் அறிஞர்களால் உரிய சான்றளிக்கவில்லை.

பின்னர் இந்துத்துவ சார்புப் பத்திரிகையான மந்தன் என்னும் இதழில் அயோத்தி குறித்த உறுதி செய்யப்படாத பல தகவல்களை அவர் கூறியிருந்தார்.

வேறு சீரிய தொல்லியல் ஆய்வாளர்கள் யாரும் அவரது கூற்றுகளை ஆதரிக்காத அதே சமயம் உச்சநீதிமன்றம் அவரது பல கூற்றுகளைப் பின்னாளில் ஏற்றுக் கொண்டது. அயோத்தியில் இராமர் கோவில் என்னும் கருத்துக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்தது. அவர் பணியில் இருந்த காலத்தில் அயோத்தியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் குறிப்பிட்டுச் சொல்லும் அளவு எதுவுமில்லை என்று அவரே கூறியிருந்தார் என்பது கவனிக்கத் தக்கது.

இராமாயணக் கதைப்படி அயோத்தியில் இருந்து வனவாசம் புறப்பட்ட இராமன், ஸ்ருங்கவேரபுரா, மற்றும் சித்ரகூடம் ஆகிய இடங்களுக்குச் சென்றார். இதன் அடிப்படையில் இராமாயணத்தின் தொல்லியல் சான்றுகளைக் கண்டறியும் நோக்கத்தில் அவ்விடங்களில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

ஆனால் அங்கு கிடைத்தவசிப்பிடமானது அயோத்தியைக் காட்டிலும் பழமையானது. மேலும் ஸ்ருங்கவேரபுரா, மற்றும் சித்ரகூடம் ஆகிய இடங்களில் கிடைத்த வடக்கத்திய மெருகேற்றப்பட்ட கருப்புப் பாண்டங்கள் மற்றும் இதர சான்றுகளின் அடிப்படையில் அவை கி.மு. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை மட்டுமே என்று ஆய்வாளர் ராஜேஷ் கொச்சார் கூறுகிறார். மேலும் இராமாயணத்திற்கு மரியாதை அளிக்கும் விதமாக அவ்விடங்களுக்கு அப்பெயர்கள் இடப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார். அது முற்றிலும் ஏற்கத் தக்கதே.

இராமாயணம் குறித்து ஆய்வு செய்த தொல்லியலாளர்களில் முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர் எச்.டி. சங்காலியா ஆவார். இராமாயணத்தின் உள்ளார்ந்த சான்றுகளை எடுத்துக் கொண்டு, அதற்குப் பொருத்தமான வரலாற்றுச் சான்றுகளை எதிர்வைத்து விரிவாக வாதிட்டார் அவர்.

இராமாயணக் கதையின் பல கூறுகளின் மீது ஆய்வுகளின் அடிப்படையில் அமைந்த கேள்விகளை எழுப்பினார். இராமாயணம் மற்றும் அயோத்தி குறித்துப் பேசும் யாரும் இக்கேள்விகளைத் தவிர்த்து விட்டு உண்மையை அடைய முடியாது என்பது திண்ணம்.


---

## பாஜக ஒன்றிய அரசால் பழிவாங்கப்பட்ட ஐ.ஆர்.எஸ். அதிகாரி பாலமுருகன்!

தமிழகத்தைச் சேர்ந்த ஐ.ஆர். எஸ் அதிகாரி பாலமுருகனை, அவர் பணி ஓய்வு பெறுவதற்கு இரண்டு நாள்கள் முன்னதாக திடீர் சஸ்பெண்ட் செய்திருக்கிறது, கடந்த ஜனவரி 2ஆம் தேதி குடியரசுத் தலைவருக்கு அவர் எழுதிய கடிதம், தமிழகத்தின் ஆத்தூரில் இரண்டு தலித் விவசாயிகளுக்கு எதிரான பணமோசடி வழக்கு தொடர்பானது. 2002 ஜூலை 2023ல் பணமோசடி தடுப்புச் சட்டம், 2002ன் கீழ், சகோதரர்கள் கண்ணையன், 72, மற்றும் கிருஷ்ணன், 67, ஆகிய இரு விவசாயிகளுக்கும் ED மூலம் சம்மன் அனுப்பப்பட்டது.

சமூக வலைதளங்களில் வெளியான இந்த சம்மன், பரவலான சீற்றத்தை ஏற்படுத்தியது.

இரண்டு தலித் விவசாயிகளும்



கூட்டாக 6.5 ஏக்கர் விவசாய நிலத்தை வைத்திருந்தனர், அவர்களது வங்கிக் கணக்கில் ரூ. 450 இருந்தது, மேலும் முதியோர் ஓய்வூதியம் ரூ. 1,000 மற்றும் அரசு வழங்கும் ரேஷன் ஆகியவற்றை நம்பியிருந்தனர். இந்த நிலையில் உள்ள அவர்கள்மீதான ஈடுநடவடிக்கைகளுக்கு கடும் எதிர்வினை ஆற்றிய நிலையில், கடந்த ஜனவரி 2024 இல், விவசாயிகளுக்கு எதிரான இவ் வழக்கை ணிஞி கைவிட்டது.

இந்தச் சூழலில், அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவையொட்டி, கடந்த 22ம் தேதி மத்திய அரசு அலுவலகங்களுக்கெல்லாம் அரை நாள் விடுமுறை அறிவித்தது மத்திய அரசு. ஆனால், பாலமுருகன் மட்டும் விடுமுறை ஏதும் எடுக்காமல் அன்று முழுவதும் அலுவலகத்தில் பணிபுரிந்தார். அவரோடு மற்ற சிலரும் பணிபுரிய வேண்டியதானது.

'எனக்கு விடுமுறை வேண்டாம். என் அலுவலகம் வழக்கம்போல செயல்படும்' என அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும் மத்திய வருவாய்த்துறைச் செயலாளருக்கும் கடிதமும் எழுதினார். அவரது செயல் டெல்லி பாஜக அரசை மேலும் சூடாக்கிவிட்டது. ஜனவரி 31ம் தேதியுடன் அவருடைய பணிக்காலம் முடிவடையும் நிலையில், ஜனவரி 29ம் தேதி அவரை சஸ்பெண்ட் செய்தது மத்திய அரசு. அதற்கான அறிவிப்பாணையில், சஸ்பெண்டுக்கான காரணம் ஏதும் விளக்கப்படவில்லை”

இது முழுக்க முழுக்க பழிவாங்கும் நடவடிக்கை அல்லாமல் வேறு என்ன? ஒரு அரசு பணியில் இருக்கிற அதிகாரி அரசமைப்புச் சட்டத்திற்கு தான் உட்பட்டு நடக்க வேண்டுமே தவிர அரசுக்கு அடிமை போல் தலையாட்ட வேண்டும் என்று நினைப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது. பாலமுருகன் கம்பீரமாக காட்சி அளிக்கிறார் இது போன்ற அதிகாரிகள் அறச்சீற்றத்தோடு இன்னும் ஆயிரக்கணக்கில் உருவாக வேண்டும்!

# எடுபடாத ராமர் கோவில் ப்ராஜெக்ட்




பிரமாண்டமாக ஊதிபெருக்கப்பட்ட ராமர் கோவில் திறப்பு பெரிதாக ஏதும் பி.ஜே.பி அலையை ஏற்படுத்தவில்லை.

ராமர் கோவில் திறப்பு நிகழ்வுக்கு பொதுமக்களுக்கு அனுமதியில்லை என்றும் அதனை டிவி மற்றும் யூடியூப் நேரலையில் கண்டு களிக்கலாம் என்றும் ஒன்றிய அரசு தெரிவித்து இருந்தது.

ஆனால் ராமர் கோவில் திறப்பு நேரலையை சில ஆயிரம் பேர்கள் மட்டுமே யூடியூபில் கண்டு மகிழ்ந்தனர் என்பது வியக்கதக்க உண்மை ஆகும்.

காவிகளில் அதிகாரபூர்வ சேனலான இந்திய டுடே வின் நேரலையை ராமர் கோவில் திறப்பு அன்று காலை 11 மணிக்கு வெறும் ~1500 பேர் மட்டுமே உலகம் முழுவதும் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தனர்.! இந்தி நேரலை வழங்கும் சேனல்களில் ஒரு லட்சத்துக்கும் குறைவானவர்களே கண்டு கொண்டு இருந்தனர்.

ஒரு கிரிகெட் மேட்ச் நேரலையை கூட பல லட்சம் பேர் முதல் கோடிகணக்கில் பார்க்கும் சூழலில் 500 வருட கனவான ராமர் கோவில் திறப்பை சில ஆயிரம் பேர் மட்டுமே கண்டுகளித்தனர்.

கோவில் திறக்கப்பட்ட பிறகு கூட கடுமையான கூட்டம் கூடுகிறது என்று காட்ட போட்டோஷாப் படங்களை மட்டுமே சங்கி ஐ.டி. ஆர்மி பரப்பி கொண்டு இருந்தது.

இந்தியாவில் லட்சக்கணக்கான கோவில்கள் உள்ள சூழலில் புதிய ஒரு கோவிலின் மீது யாருக்கும் ஆர்வமில்லை என்பது போல தெரிகிறது.

இதற்கு காரணம் அயோத்தி ராமர் கோவில் பிரச்சனை என்பது ஒரு எதிரணி இல்லாத விளையாட்டாக ஆகிபோனது தான்.

1990 களில் கடுமையான எதிர்ப்புகளை, போராட்டங்கள் மூலம் காட்டிகொண்டு இருந்த முகலீம்கள் தற்போது பாபர் மசூதிராமர் கோவில் செட்டில்மெண்டை ஏற்றுகொண்டு விட்டனர். நாடு முழுவதும் எந்த எதிர்ப்பும் இல்லை.

எவ்வித எதிர்ப்பும் இசுலாமியர்கள் தரப்பில் இல்லாத போது இக்கோவில் திறப்பு ஒரு வெற்றிகளிப்பை சாதாரண மக்களுக்கு தரவில்லை. எவ்வித களிப்பும் இல்லாத இந்த நிகழ்வில் மக்கள் ஆர்வம் செலுத்தவில்லை என்பதே உண்மையாகும்.

பல ஆண்டுகளாக காவி அரசியலுக்கு "தூபம்" போட்டு வந்த பாகிஸ்தான் தற்போது திவாலாகி நிதி நெருக்கடியில் உள்ளது. அவ்வப்போது ஐ.எம்.எப்.ம், உலக வங்கியும் தரும் ஐஞ்சு, பத்து டாலர்களை வைத்து வயிற்றை கழுவிகொள்வதே அவர்களுக்கு பெரும் பிரச்சனையாக உள்ளதால், அவர்கள் காஷ்மீர் பிரச்சனையிலோ அல்லது பாபர் மசூதி பிரச்சனையிலோ கவனம்செலுத்தவில்லை.

சூத்திரரான திரு மோடி கர்ப்ப கிரகத்துக்குள் வரப்படாது என்று பல்வேறு பூரி சங்கராச்சாரியார்களும், வடகலை பேராசிரியர்களும், தென்கலை குண்டர்களும் நெருக்கடி தந்ததால் தனது பிறவி தீட்டுகளை கழிக்க பிரதமர் ஸ்ரீரங்கம் கோவில் உட்பட பல கோவில்களுக்கு போக நிர்பந்திக்கப்பட்டார்.

ராமேஸ்வரம் கோவிலில் அவர் தலையில் தண்ணீரை ஊற்றிகொள்ளும் வீடியோவை பாருங்கள், அயோத்தியில் ராமர் கோவில் திறப்பில் அவர் முகத்தை பாருங்கள். இப்படி ஒரு சோகமான ஆற்றாமை கொண்ட மோடியின் முகத்தை இதுவரை நீங்கள் பார்த்து இருக்க மாட்டீர்கள்.

அவரின் ஆற்றாமை மற்றும் சோகத்துக்கு என்ன காரணம்?

அவர்களின் காவி சாம்ராஜ்ஜியம் முடிவை நெருங்குகிறது என்பதே அதற்கு காரணம்.

அவர்களிடம் தற்போது உள்ள ஒரே ஆயுதம் மாநிலத்துக்கு மாநிலம் மக்கள் நீதி மய்யங்களையும், மக்கள் நலக்கூட்டணிகளையும், ஒவைசி களையும், சீமான் போன்றவர்களையும், பகுஜன் சமாஜையும் வைத்து வாக்குகளை பிரிப்பது ஒன்றே ஆகும்.

மூன்றாவது அணியும் காவிகளின் 'பி' டீம் தான் என்பது தற்போது நாடு முழுவதும் அம்பலமாகியுள்ளதால் அந்த வழமையான திட்டம் தற்போது எடுபடுமா என்று பொறுத்திருந்து தான் காண வேண்டும்.

இ.ந்.தி.யா கூட்டணி வெல்லும்.

புதிய சம்பூகன்
முகநூல் பதிவு

# வாய்ப்பந்தல் போ



த.லெனின்

**ஏழைகள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் ஆகிய நான்கு முக்கிய பிரிவினர்களை அரசாங்கம் கவனம் செலுத்துவது போன்று இடைக்கால நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்து பேசிய போது நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.**

அத்தோடு கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி மக்கள் பன்முக வறுமையில் இருந்து விடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வரும் 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை 'விக்சித் பாரத்' வளர்ந்த நாடாக்க அரசு செயல்பட்டு வருகிறது என்றார். "எங்கள் கவனம் சப்கா சாத், சப்கா விகாஸ்" என்றார்.

ஆனால் உண்மை என்ன?, மனித வளர்ச்சிக் குறியீடு மற்றும் உலகளாவிய பசிக் குறியீடு ஆகியவற்றில் இந்தியாவிற்கு தொடர்ந்து சரிவு ஏற்பட்டுள்ளது.

* உலகளாவிய பசி குறியீட்டில் மொத்தமுள்ள 125 நாடுகளில் இந்தியா 111வது இடத்தில் உள்ளது.

* இந்தியாவில் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு கொண்டவர்களாக உள்ளனர்

* உலகில் பட்டினியால் இறக்கும் குழந்தைகளில் 2/3 க்கும் அதிகமானோர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். இந்தியாவில்

* குழந்தை இறப்பு 1000 பேருக்கு26.619 இறப்புகளாக உலக அளவில் அதிகமாக உள்ளது.

உணவு உதவித் தேவைகள் குறித்த இந்திய அரசின் புள்ளிவிவரங்கள் குறித்து ஐ.நா. மதிப்பீடு கேள்விகளை எழுப்பியுள்ளது. 2023 டிசம்பரில் வெளியிடப்பட்ட ஐ.நா. அறிக்கை, 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் 100 கோடிக்கும் அதிகமான மக்களால் ஆரோக்கியமான உணவை பெற முடியவில்லை என்று தெரிவிக்கிறது, 813 மில்லியன் மக்களுக்கு மட்டுமே உணவு உதவி தேவை என்ற அரசாங்கத்தின் கூற்றுக்கு இது முற்றிலும் முரணானது. உண்மையான வருமானம் 50 சதவீதம் அதிகரித்துள்ளது என்கிறார் நிதியமைச்சர். ஆனால் உண்மையான ஊதியம் உயரவில்லை என சர்வதேச தொழிலாளர் கழகம் தெரிவித்துள்ளது. கார்ப்பரேட்டுகள் பெறும் வருமானத்தை வெகுமானமாகக் கொள்வார் போலும்!

### பெண்களின் நிலை!

தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு 2021 ஐ அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆய்வில், 20% ஏழை குடும்பங்களில், 40% க்கும் அதிகமான பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் கூட பால் பொருட்களை உட்கொள்வதில்லை. நாட்டில் 50% க்கும் அதிகமான பெண்களும் 40% ஆண்களும் வைட்டமின் ஏ நிறைந்த பழங்களை உட்கொள்வதில்லை என்றும் அது கண்டறிந்துள்ளது

உயர்கல்வியில் பெண்களின் கல்விச் சேர்க்கை 10 ஆண்டுகளில் 28 % அதிகரித்துள்ளது!

ஷிஜிணிவி (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) படிப்புகளில் 43 % பெண்களின் சேர்க்கை உள்ளது, இது உலகிலேயே அதிகம் என மத்திய நிதியமைச்சர் சீதாராமன் தெரிவித்துள்ளார். ஆனால் ஒட்டு மொத்த உயர் கல்வி வாய்ப்பில் இந்தியாவில் 27% எனும் போது இது எப்படி சாத்தியம்?

### பாலின சமத்துவமின்மை:

* உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை, 2023 இல் இந்தியா 146 நாடுகளில் 127 வது இடத்தைப் பிடித்துள்ளது.

* 2023 ஆம் ஆண்டு நிலவரப்படி, பெண்கள் மக்களவையில் 15.2 சதவீத இடங்களையும், ராஜ்யசபாவில் 13.9 சதவீத இடங்களை மட்டுமே பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் கொண்டுவந்த பெண்களுக்கான 33% இட ஒதுக்கீடு 2031 தான் அமலாக வாய்ப்பிருக்கிறது ஆனாலும் வாய்ப்பந்தல் தொடர்கிறது


இந்தியாவில் பெண்கள் இன்னும் சவால்களை எதிர்கொள்கின்றனர். பாலின பாகுபாடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் சமத்துவமற்ற ஊதியம் ஆகியவை தொடர்ந்து முக்கிய பிரச்சினைகளாக உள்ளன.

பெண் சிசுக்கொலை மற்றும் சிசுக்கொலைகள், குறிப்பாக கிராமப்புறங்களில், உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பல பாலியல் துன்புறுத்தல் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் பதிவாகி வருவதால், பெண்களின் பாதுகாப்பு ஒரு பெறும் பிரச்சினையாக மாறியுள்ளது.

### சமூக அநீதியே சமூக நீதி!

சாதியை அடிப்படையாகக் கொண்ட சமூகப் புறக்கணிப்பு இந்தியாவில் சமத்துவமின்மையை அதிகரிப்பதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தது. இட ஒதுக்கீடு, தனியார்மயம் மற்றும் தாராளமயமாக்கள்ால் பல இடர்பாடுகளை இன்று சந்தித்து வருகிறது

நமது அரசுக்கு சமூக நீதி என்பது அவசியமான முன்மாதிரி என்கிறார். ஆனால் ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனல் வெளியிட்ட சமத்துவமின்மை




அறிக்கையில்...

இந்தியா உலகின் மிகவும் சமத்துவமற்ற நாடுகளில் ஒன்றாகும், மக்கள்தொகையில் முதல் 10% பேர் மொத்த தேசிய செல்வத்தில் 77% வைத்துள்ளனர். இந்திய மக்கள்தொகையில் 1% பணக்காரர்கள் நாட்டின் செல்வத்தில் 53% ஐக் கொண்டுள்ளனர், அதே சமயம் ஏழைகளில் சரிபாதி பேர் தேசியச் செல்வத்தில் வெறும் 4.1% பங்கை தான் பகிர்ந்துக் கொள்கிறார்கள்.

### ஏழைகள் மீதான வரிச்சுமை!

நாட்டின் மொத்த சரக்கு மற்றும் சேவை வரியில் (ஜிஎஸ்டி) தோராயமாக 64% மக்கள் தொகையில் கீழ்மட்டத்தில் உள்ள 50% மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது, அதே சமயம் மேல் தட்டில் உள்ள 10% மக்களிடம் வெறும் 4% மட்டுமே வசூலிக்கப்பட்டு, வரி சலுகை அளிக்கப்படுகிறது. சாதாரண ஏழை இந்தியர்களுக்கான சுகாதாரப் பாதுகாப்பை அளிக்க முடியவில்லை. அவர்களில் 63 மில்லியன் பேர் (ஒவ்வொரு வினாடிக்கும் ஏறக்குறைய இரண்டு பேர்) ஒவ்வொரு ஆண்டும் சுகாதாரச் செலவுகள் காரணமாக வறுமை கோட்டுக்கு மேலிருந்து வறுமை கோட்டுக்கு கீழே தள்ளப்படுகிறார்கள்.

உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை, 2023 குறித்த கணக்கெடுப்பில்

இந்திய மக்கள்தொகையில் சுமார் 74% பேர் ஆரோக்கியமான உணவை பெற முடியவில்லை, மேலும் 39% பேர் போதுமான ஊட்டச்சத்து இல்லாத உணவைப் பெறுகின்றனர்.

### செல்வ குவிப்பு!

ஒரு சிலரின் கைகளில் செல்வம் குவிவது பல தலைமுறைகளாக சமத்துவமின்மையை நிலைநிறுத்துகிறது

### சலுகைசார் முதலாளித்துவம்!

மலிந்து போன ஊழல் நடைமுறைகளுக்கு ஆதரவான முறையில் அரசு ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினருக்கு, குடும்பங்களுக்கு செல்வக் குவிப்புக்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது, இது மேலும் சமத்துவமின்மையை அதிகரிக்க வைக்கிறது

இவர்களால் கடைபிடிக்கப்படும் பிற்போக்கான வரிவிதிப்புக் கொள்கைகள்: செல்வந்தர்களுக்குச் சாதகமாகவே இருக்கும்.

### ஊதிய இடைவெளிகள்!

திறன் மற்றும் திறன் சாரா தொழிலாளர்களுக்கு

# டும் இடைக்கால பட்ஜெட்!

இடையிலான ஊதிய இடைவெளிகள் வருமான சமத்துவமின்மைக்கு காரணமாகும். முறைசாரா தொழிலாளர் சந்தைகள் குறைந்த ஊதியங்கள் குறைவான நன்மைகள் தரும் வருமானப் பிரிவினை மேலும் விரிவுபடுத்தலாம்.

குறைந்தபட்ச ஊதிய விதிமுறைகள் கூட்டு பேரம் பேசும் உரிமைகள் உட்பட பலவீனமான தொழிலாளர் சந்தை கொள்கைகள் வருமான ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிவகுக்கும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச்




திட்டத்திற்கான ஒதுக்கீடு, பல ஆண்டுகளாக குறைந்து வருவதைக் காண்கிறோம் இது 2014 – 15 நிதியாண்டில் ஒட்டுமொத்த பட்ஜெட்டில் 1.85% ஆக இருந்து, 2023 – 24 நிதியாண்டில் வெறும் 1.33% ஆக சரிந்தது, இது இதன் வரலாற்றிலேயே மிக குறைந்த அளவைக் காட்டுகிறது. தற்போதைய ஒதுக்கீடு ரூ. 86,000 கோடி, இது முந்தைய ஆண்டு ஒதுக்கீட்டை விட திருத்தப்பட்ட மதிப்பீட்டில் இருந்து ஒரு அற்பத் தொகையைத் தவிர வேறில்லை.

ஆதார் அடிப்படையிலான ஊதிய முறைகளால் , 57% தொழிலாளர்கள் தங்கள் ஊதியம் பெறுவதை பாதித்துள்ளன, 100 நாட்கள் வேலைவாய்ப்பை வழங்குவது அத் திட்டத்தின் குறிக்கோளாக இருந்தாலும், 3% பேர் மட்டுமே அதைப் பெறுகிறார்கள்

**வீழும் விவசாயம்!**

கடந்த 2014 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தில் மோடி, "நம் விவசாயிகள் தூக்கு கயிறு எடுக்கத் தள்ளப்படக் கூடாது, நம் விவசாயிகளுக்கு கடன் கொடுப்பது அரசு மற்றும் வங்கிகளின் பொறுப்பு அல்லவா? விவசாயிகளின் நிலைமை மேம்பட்டால், அது அவர்களுக்கு மட்டும் முன்னேற்றம் இல்லை, பலருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் என்பதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும் என்றார்.

அன்னதாதா' (விவசாயிகளுக்கான) குறைந்தபட்ச ஆதார விலைகள் அவ்வப்போது அதிகரிக்கின்றன, எலக்ட்ரானிக் அக்ரி மண்டி 1051 மண்டிகளை இணைத்துள்ளது, இதன் மூலம் 2 லட்சம் கோடி பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்றும் நிதியமைச்சர் வாய் நீளம் காட்டுகிறார். அத்துடன் 11.8 கோடி விவசாயிகளுக்கு நேரடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்

ஆனால் 2022ம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதே அது என்னவாயிற்று? இதுவரை அது நடக்கவில்லை. மாறாக, விவசாயிகள் கடன் பிரச்சனைகளை தொடர்ந்து சந்தித்து வருகின்றனர்.

நரேந்திர மோடியின் ஆட்சியில் (2014 – 2022) விவசாயத் துறையில் 1,00,474 தற்கொலைகள் நடந்துள்ளதாக சமீபத்தில் வெளியிடப்பட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) அறிக்கை இதனை தெரிவித்துள்ளது. அதாவது ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 30 விவசாயிகள் தற்கொலை செய்து மாண்டு போகிறார்கள்.

2013 இல் 52.2% ஆக இருந்த கடன்பட்ட விவசாயிகளின் சதவீதம் 2019 இல் 50% ஆகக் குறைந்துள்ளது என்று அரசாங்கம் கூறுகிறது. இருப்பினும், கடன்பட்டுள்ள விவசாயிகளின் மொத்த எண்ணிக்கை அதாவது 902 லட்சத்தில் இருந்து 930 லட்சமாக அதிகரித்துள்ளது நிலுவையில் உள்ள கடனின் சராசரி அளவு 2013 ஐ விட மேலும் சுமார் 1.6 மடங்கு அதிகரித்துள்ளது.

**இளைஞர்களும் வேலை ஏய்ப்புகளும் !**

ஏற்றுமதியை இரட்டிப்பாக்கி ரூ. 1லட்சம் கோடி ரூபாய்க்கு உயர்த்துவோம் என்கிறார் நிதியமைச்சர் சீதாராமன். இதன் மூலம் 5 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் கூறினார்.

ஆனால் 2014 தேர்தல் பிரசாரத்தின் போது ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்ற பாஜகவின் தேர்தல் வாக்குறுதி இது வரை நிறைவேற்றப்படவில்லை. மாறாக, டிசம்பர், 2023 நிலவரப்படி, இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் (CMIE) அறிக்கையின்படி வேலையின்மை விகிதம் 8.7% ஆக உயர்ந்துள்ளது.

ஸ்கில் இந்தியா மிஷன் நாட்டில் 1.4 கோடி இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து திறமையை மேம்படுத்தியுள்ளது என்று நிதியமைச்சர் தெரிவித்தார். ஆனால் அவர்களுக்கான வேலை வாய்ப்பு குறித்து எந்த தகவலையும் அவர் வெளியிடவில்லை.

தனியார் துறையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான நிதியை ஊக்குவிப்பதற்காக 1லட்சம் கோடி 50 வருட வட்டியில்லா (நீண்ட கால நிதியுதவி அல்லது மறுநிதியளிப்பு) அளிக்கப்படும் என்கிறார் ஆனால் அதிகம் வேலை வாய்ப்பை தரும் சிறு, குறு, நடுத்தர தொழில்கள் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

பாஜக அரசாங்கத்தின் 10 ஆண்டு காலத்தில் எந்த வேலை வாய்ப்புகளையும் உருவாக்கவில்லை, வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்கள் எதுவும் இல்லை. பணக்காரர்களுக்கு வரி விதிக்க, சமத்துவமின்மையைக் குறைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கார்ப்பரேட் நிறுவனங்களின் வாராக் கடன்களைத் திரும்பப் பெறுவதற்கான கொள்கை வழிகாட்டுதல்கள் எதுவும் இல்லை.

மொத்தத்தில் இது கார்ப்ரேட்டுகளுக்கான பட்ஜெட் !

**தொடர்புக்கு: 9444481703**

## திருப்பத்தூர் தோழர் க.தங்கச்சாமியின் நூறாவது ஆண்டு!

கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் க.தங்கச்சாமி, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரை சேர்ந்தவர். சிறு வயதிலிருந்தே வெள்ளையனை எதிர்க்கும் குடும்பத்தில் பிறந்ததால், ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு கொண்டவராக வளர்ந்தார். அதனால் பள்ளி படிப்பை துறந்து, காங்கிரசில் சேர்ந்து பணியாற்றினார்.

1935 ஜில்லா போர்டு தேர்தலிலும், 1937 மாகாண தேர்தலிலும் காங்கிரஸ் வெற்றி பெற கடுமையாக உழைத்தார். 1942 ல் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்த அவர் மாவட்ட நிர்வாகக் குழுவில் அங்கம் வகித்து, மாநில நிர்வாகக் குழு வரை உயர்ந்தார்.



1949 ல் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டவுடன் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்த அவரை, சுட்டுப்பிடிக்க உத்தரவும், காட்டிக் கொடுப்பவருக்கு ரூ.5000 சன்மானம் என்றும் அறிவிக்கப்பட்டது. 1949 இறுதியில் அவரை சிவகங்கையில் கைது செய்து சிறையில் அடைத்த அரசு, அவரது மாடுகளையும், கதவுகளையும் ஜப்தி செய்து ஏலம் போட்டது.

1953 ல் விடுதலையாகி வெளியில் வந்த அவர் திருமணம் செய்து கொண்டார். அவருக்கு 2 பெண்கள், 3 ஆண்கள் என மொத்தம் 5 குழந்தைகள். 1953 லிருந்து மருதுபாண்டியர்களின் நினைவிடத்தை பராமரித்து வந்தார்.

## உஸ்தாத் பிஸ்மில்லாகான் வீட்டையும் இடிப்பீர்களா?..

உஸ்தாத்பிஸ்மில்லாகான் என்கின்ற இசை மகாராஜாவிடம் ஒரு கேள்வி இருந்தது. "மானுடம் கடவுளால் படைக்கப்பட்டிருந்தால் மனித உறவில் சமத்துவம் இல்லையே ஏன்?

வாழ்நாள் முழுதும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. உச்சபட்ச தன் இசைச் சிதறல்கள் மூலம் விடை கிடைக்கலாம் என்று ஓயாமல் இசை வேள்வி செய்து கொண்டிருந்தார்.

இந்தமண்ணையும் காசி விஸ்வநாதரையும் நேசித்தார். நெருக்கடி மிகுந்த வசதியில்லாத வீட்டில் ஏழைகளிடையே வாழ்ந்தார். ஒரு மாபெரும் கலைஞரால் செய்யமுடிந்த புரட்சி இது.

முதல் இந்தியக் குடியரசுதின விழாவில் செங்கோட்டையை நோக்கிய ஊர்வலத்தில் கங்கையில் ஓடம் செலுத்தும் ஓடக்கார்களின் ஓடப்பாட்டையே இசைத்தார். இஸ்லாமிய சூஃபிபிசக் கலகக்குரல் எனலாம். காசியை விட்டு நகரமறுத்தார். வெளிநாடுகளில் இவரை அழைத்து பிரம்மாண்டமான அரண்மனை கட்டித்தந்து வசிக்கச் சொல்லியும் மறுத்துவிட்டார். "காசி விஸ்வநாதர் என் ஷெனாய் இசை கேட்டுத்தான் துயில் எழுவார் நான் போய்விட்டால் அவரை யார் எழுப்புவார்கள்?"

பொதுவாகத் தமிழகத்தில் கர்னாடக இசைகேட்ட செவிகளுக்கு ஷெனாய் ஒலி சங்கடப்படுத்தும். மிக நீளமான இசையைத் தமிழ்செவிகள் ஏற்காது. ஓர் ஒன்றரை, ரெண்டு மணிக் கச்சேரிக்கே பழக்கமானவர்கள் நம் ரசிகர்கள். ஆனால் பிஸ்மில்லா ஏற்கவைத்தார். ஏதேதோ கேட்பார்கள். இசைதவிர வேறு எதுவும் தெரியாதென்பார். காற்றை உயிர்மூச்சாய் மாற்றி இனிய நாதமாக வெளிப்படுத்தினார். இசை ஆராதனை.

இசையரசி பேகம் அக்தர், லதா மங்கேஷ்க்கர் இவர்கள் இசையில் உஸ்தாத்திற்குத் தனிமயக்கமே உண்டு. "தீவானா பனாதே." என்ற பேகம் அக்தரின் கஜல் என்றால் மெய்மறந்து விடுவார். ஷெனாய், கோயில் இசைதான். இதை மாற்றி ஜனரஞ்சக இசையாக்கியவர் பிஸ்மில்லாகான் சாஹிப். வாரணாசி நகரை விட்டு நகர மறுத்தவரை வாரணாசி மாதிரியே ஒரு நகரை உருவாக்கித் தருக்கிறோம் என்று பல வெளிநாடுகள் சொன்னபோது மறுத்துவிட்டார்.

ஒரு ரயில் பயணத்தின்போது ஒரு மாடு மேய்க்கும் சிறுவன் தன் குழலில் ஏதோ இசைத்துக் கொண்டிருந்ததைக் கண்டு பிரமித்துப்போனார். இவரே அதற்குக் 'கண்ணையா' ராகம் எனப் பெயரிட்டு இசைத்தார். மாயக்கண்ணனே வந்து கற்றுக் கொடுத்தாக நம்பினார். பண்டிட் ஹரிப்ராசத் சௌரஸ்யாவும் இந்தக் 'கண்ணையா' ராகத்தைத் தன் புல்லாங்குழலில் முயன்று பார்த்தார். கங்கையை நேசித்தார். ஷெனாய் இசைத்துக் கொண்டே கங்கைக் கரையில் நடப்பதுண்டு.

நம் டி.என்.ஆர் பயன்படுத்திய ஆரம்ப கால திமிரி நாயனம் மாதிரிதான் இது. பிறகு தனக்கேற்றவாறு சற்று நீளம் குறைத்து வாசித்தார். மதுரை பொன்னுசாமிப்பிள்ளை நாயனத்திற்கும் திமிரிக்கும் இடைபட்டது என்பர். இதில் மத்யம காலத்திலேயே வாசிக்க முடியும் என்பதுண்டு. நம் டி.என்.ஆர் உஸ்தாத்தின் ஷெனாயை வாசித்துப் பார்த்திருக்கிறார். அகில இந்திய வானொலி தலைவர்கள் இறந்தால் உடனே ஷெனாய் தான் என்பதால் நம்முடைய முகாரி மாதிரி இதற்கும் அவப்பெயர் வந்துவிட்டது. வடக்கே இதுதான் மங்கல வாத்யம்.

இஸ்லாம் இசையை ஆராதிக்கவில்லை என்பார்கள். மவுலவிகள் செய்த வேலை. கடவுளிடம் மட்டுமே மயங்க வேண்டும். கான்"னிடம் கேட்டபோது இசை இறைவனுடையது என்றார். அல்லாஹூ...அக்பர் என்ற அழைப்பே இசைதானே என்றார். நம் கர்நாடக இசையில் பாங்கு, சக்ரவாகம் என்பதுண்டு.


மியா மலஹர், சுதா பஸந்த், மிருஹ் பெஹ்ஹாக், மதுவந்தி, பீம்ளாஸி தோடி, பூபாளம், கலாவதி, பைரவ் கஜ்ரி, துர்கா, துன், ப்ருந்தா பாணி யமுனா, ஜேன்புரி, சந்திரபிரபா, பந்த் கேதார், காஃபிதாட் போன்றவற்றில் உஸ்தாத் அற்புதம் பண்ணியிருப்பார். அவருக்குப் பிடித்தமான இராகங்களும்கூட.

உஸ்தாத் அல்லா ரக்காகான், உஸ்தாத் அம்ஜத் அலிகான், உஸ்தாத் அப்துல் லத்தீப்கான், உஸ்தாத் கரீம் கான், உஸ்தாத் ஜாகிர் ஹூஸைன் முதலானவர்களை அடக்கியதுதான் இந்திய இசை மரபு. ஆன்மாவைத் தொடும் இசை இவர்களுடையது.

இப்போது அரசியலில் இடிமன்னர்கள் உஸ்தாத் பிஸ்மில்லா கானின் வீட்டை இடிக்கப் போவதாக பேச்சு. காசி விஸ்வநாதரும், மாயக்கண்ணும் நேசித்த வீட்டை இடித்துவிடமாட்டார்கள் எனப் பிரார்த்திப்போம். ஏனெனில் உஸ்தாத்தின் ஷெனாய் இசை கங்கைக்கரை நெடுக ஒலித்து வாரணாசி முழுதும் ரம்மியப்படுத்திக் கொண்டிருக்கிறது.

**நா.விச்வநாதன்**

# வெண்மணி குறித்து பேசிய ஆளுநருக்கு அமைச்சர் பதிலடி



தமிழ்நாட்டில் பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தை சரியாகச் செயல்படுத்த வில்லை என்று ஆளுநர் ஆர்.என். ரவி விமர்சனத்திற்கு அமைச்சர் ஐ.பெரியசாமி விளக்கமளித்துள்ளார்.

தமிழ்நாடு ஆளுநர் ரவி, தனது எக்ஸ் தள பக்கத்தில்; நிர்வாக அக்கறை யின்மை மற்றும் ஊழல் குற்றச்சாட்டால் நாகபட்டினம் மாவட்டத்தில் தகுதி வாய்ந்த ஏழை கிராமத்தினர் பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் பலனைப் பெற முடியாமல் போனது வருத்தமளிக்கிறது என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், ஆளுநர் ஆர்.என். ரவியின் கருத்துக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி பதிலடி தந்துள்ளார். இதுகுறித்து அமைச்சர் ஐ.பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்: நாகப்பட்டினம் மாவட்டம் வெண்மணி ஊராட்சியில் பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 127 பயனாளிகளுக்கு வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு இதுவரை 75 பயனாளிகள் வீடுகள் கட்டி முடித்துள்ளனர். மீதமுள்ள 52 பயனாளிகள் வீடுகள் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ஒன்றிய அரசால் 31,051 வீடுகள் மட்டும் வழங்கப்பட்டு 23,110 வீடுகள் பயனாளிகளால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ், ஒரு வீடு கட்டுவதற்கு ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை ரூ.1.20 லட்சம் ஆகும். இத்திட்டத்தில் ஒன்றிய அரசு தன் பங்காக வீடு கட்ட 72 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்குகிறது. ஆனால், ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலன் கருதி தமிழ்நாடு அரசு மாநிலத்தின் நிதி பங்களிப்பாக ரூ.1 லட்சத்து 68 ஆயிரம் வழங்கு கிறது.

இதனுடன் மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டம் மூலம் ரூ.26,460 , தூய்மை பாரத இயக்கம் மூலம் ரூ.12,000 உடன் சேர்ந்து தமிழ்நாட்டில் ஒரு வீட்டின் அலகுத் தொகை ரூ.2,78,460 ஆக உள்ளது. இந்தியாவிலேயே அதிக அளவு தமிழ்நாட்டில் தான் பயனாளிகளுக்கு பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்ட அதிக தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு பதவியேற்றவுடன் 2,41,861 பயனாளிகளுக்கு வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது.

ஏற்கெனவே அனுமதி வழங்கி முடிவுறாமல் இருந்த வீடுகளையும் சேர்த்து 7.5.2021 க்கு பின்னர் இதுவரை 2,93,277 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்த அரசு பதவி யேற்ற பிறகு, ஒன்றிய அரசு நிதியிலிருந்து ரூ.2933.31 கோடி வரப்பட்டுள்ளது. மாநில அரசு இத்திட்டத்திற்கு ரூ.3116.54 கோடி நிதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பயனாளிகள் விதிமுறைகளுக்கு உட்பட்டு முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

வெண்மணிக்கு அனுமதி வழங்காத ஒன்றிய அரசு

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு ஊராட்சி வாரியாக வீடுகள் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒன்றிய அரசால் இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டு தகுதி வாய்ந்த பயனாளிகள் இல்லாத ஊராட்சிகளில் இருந்து, தகுதி வாய்ந்த பயனாளிகள் அதிகம் உள்ள ஊராட்சிகளுக்கு வீடுகளை மாற்றி வழங்க, ஒன்றிய அரசு ஒப்புதல் அளிக் காத காரணத்தால், வெண்மணி போன்ற ஊராட்சிகளுக்கு இத்திட்டத் தின் கீழ் தேவைக்கேற்ப வீடுகள் வழங்க இயலவில்லை.

தற்போது தமிழ்நாடு அரசு குடிசை வீடுகளுக்கு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வெண்மணி ஊராட்சியில் மொத்தம் 66 குடிசை வீடுகள் தகுதி வாய்ந்தவையாக கண்டறியப்பட்டுள்ளது. மேற் காணும் குடிசை வீடுகள் தமிழ்நாடு அரசின் ஊரக குடியிருப்பு திட்டம் மூலம் கான்கிரீட் வீடுகளாக இனி வரும் காலங்களில் மாற்றப்படும். எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையுடன் தொடர்ந்து செயல் படும் இந்த அரசு, ஊரகப் பகுதி மக்களுக்கு தேவையான வீடு கட்டும் திட்டத்தை தொடர்ந்து திறன்பட செயல்படுத்தும்.

இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

# சேலம் கே.ஏ.வேணுகோபால் மறைவுக்கு இரங்கல்!

சேலம் கே.ஏ.வேணு கோபால் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளதாவது.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சேலம் மாவட்ட மூத்த தலைவரும், தொழிற்சங்க முன்னோடியுமான கே.ஏ.வேணுகோபால் (88) 05.02.2024 அன்று மேட்டூர் பொன்நகரில் உள்ள அவரது வீட்டில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில் (தற்போது நாமக்கல் மாவட்டம்) நெசவு நகரமான கொமராபாளையத்தில் இளம் வயதில் நெசவாளர்களை சங்க அமைப்பில் அணி திரட்டுவதில் ஈடுபட்டு தொழிற்சங்க பணிகளில் ஈடுபட்டார்.

அந்தக் காலத்தில் கட்சியின் முன்னோடிகளாக திகழ்ந்த டி.எஸ். அர்த்தனாரி, கே.வி.ராமசாமி போன்றோருடன் ஏற்பட்ட தொடர்பில் கட்சியில் இணைந்து செயல்பட்டு திருச்செங்கோடு வட்டச் செயலாளர் பொறுப்பில் சிறப்பாக செயல்பட்டவர்.

சேலம் மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் பொறுப்பேற்று, குடும்பத்துடன் சேலம் சென்று, பொது வாழ்க்கையை தொடர்ந்தவர். பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்று, சிறப்பாக செயல்பட்டவர்

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சேலம் மாவட்டத் துணைச் செயலாளர் பொறுப்பில் நீண்ட காலம் செயல்பட்டவர், கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் பொறுப்பிலும் செயல்பட்டவர்.

கே.ஏ.வேணுகோபாலுக்கு, சந்திரா என்கிற மனைவியும், கல்பனா என்கிற மகளும், மகேந்திரன் என்கிற மகனும் இருக்கின்றனர். அவரது மறைவு பெரும் வேதனையளிக்கிறது.

தோழர் கே.ஏ.வேணுகோபால் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு அவருக்கு செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# நிதிநிலை அறிக்கை ஒரு கானல் நீர்!

**இரா.முத்தரசன் சாடல்!**

கானல் நீர் காட்டி தாகம் தீர்க்க முயலும் நிதிநிலை அறிக்கை இது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

நாட்டின் பதினேழாவது நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் நிலையில் ஒன்றிய அரசின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2024 – 25க்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை 01.02.2024 நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த பத்தாண்டுகளாக ஒன்றிய அரசு வழங்கிய சில உதவித் திட்டங்களை தொகுத்துக் கூறியுள்ள நிதியமைச்சர். நாடு 2027 ஆம் ஆண்டு வளர்ச்சி அடைந்த நாடாக உயரும் எனக் கூறுகிறார். கொரோனா நோய் பெருந்தொற்று தீவிரமாக பரவிய நிலையிலும் விவசாயிகளின் சாகுபடி நிலங்களை பறித்து, பெரும் குழும நிறுவனங்களுக்கு வழங்கும் வேளாண் வணிக சட்டங்களையும், மின்சார சட்ட திருத்த மசோதாவையும் எதிர்த்தும், விவசாய விலை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்ய சட்டபூர்வ ஏற்பாடுகள் செய்ய வலியுறுத்தியும் விவசாயிகள் ஓராண்டுக்கும் மேலாக போராடினர்.

இந்தப்போராட்டத்தை ஒடுக்க, சிதைக்க, சிதறடிக்க ஒன்றிய அரசும், பாஜகவும் சகல முயற்சிகளையும் மேற்கொண்டு தோற்றுப் போனது. இறுதியில் விவசாயிகளுக்கு உறுதிமொழி அளித்து வேளாண் வணிக சட்டங்களை திரும்பப் பெற்றது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக கொடுத்த வாக்குறுதியை மறந்து, விவசாயிகளை வஞ்சித்து வருவதை நிதிநிலை அறிக்கையும் வெளிப்படுத்துகிறது. ஐக்கிய விவசாயிகள் முன்னணியும், மத்திய தொழிற்சங்கங்களும் ஒருங்கிணைந்து தொடர் போராட்டங்களை நடத்தி வரும் நிலையிலும், அதன் கோரிக்கைகளை பரிசீலனைக்கும் எடுத்துக் கொள்ளாத நிதி நிலை அறிக்கை ஒன்றிய அரசின் ஏதேச்சதிகார கார்ப்ரேட்டு ஆதரவுக் கொள்கையை உயர்த்தி பிடிக்கிறது.

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை மேம்படுத்தி ஆண்டுக்கு 200 நாள் வேலை வழங்க வேண்டும், தினசரி குறைந்தபட்ச ஊதியமாக ரூ.700 நிர்ணயித்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கை மீதும் கவனம் செலுத்தவில்லை. ஆனால் நேரடி வரி செலுத்தும் பிரிவுக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது. கார்ப்பரேட்டு வரி குறைத்து, மேலும் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்புக்கு முன்னுரிமை கொடுப்பதாக முழங்கும் நிதி நிலை அறிக்கை ஆறு கோடிக்கும் அதிகமான தொழிலாளர்களின் வேலை பறிக்கப்பட்டிருப்பது குறித்து மௌனமாகிவிட்டது. நாட்டின் செல்வ உற்பத்தியின் உயிர் நாடியான உழைக்கும் மக்களின் உணர்வுகளை கருத்தில் கொள்ளாத நிதிநிலை அறிக்கை ராமர் கோவிலையும், அதனை சுற்றி கட்டமைக்கப்படும் அரசியல் வியூகத்தையும் வார்த்தை ஜாலங்களில் கட்டமைத்துள்ளது.

கானல் நீர் காட்டி தாகம் தீர்க்கும் தண்ணீர் இருப்பதாக கூறும் இடைக்கால நிதிநிலை அறிக்கை வழக்கம் போல் ஏழை, எளிய, உழைக்கும் மக்களுக்கும், சிறு, குறு நடுத்தர தொழில்களுக்கும் பெருத்த ஏமாற்றம் அளிப்பதாக அமைந்துள்ளது என்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# இலங்கை கடற்படை, கடற்கொள்ளையர்கள் அட்டூழியம் ஒன்றிய அரசின் அலட்சியம்!

**இரா.முத்தரசன் கண்டனம்!**

இலங்கை கடற்படை மற்றும் கடற் கொள்ளையர்கள் அட்டூழியம் ஒன்றிய அரசின் அலட்சியத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார். அதன் விவரம் வருமாறு.

ராமேஸ்வரம் பகுதியில் இருந்து 04.02.2024 அன்று கடலில் மீன் பிடிக்க சென்ற 23 மீனவர்களை கைது செய்து, காங்கேசன்துறைக்கு அழைத்துச் சென்றுள்ளது இலங்கை கடற்படை. மீனவர்களிடம் இருந்த இரண்டு படகுகளும், வலைகளும் கடற்படையினர் கைப்பற்றி சென்றுள்ளனர்.

இதே போல் 03.02.2024 அன்று வேதாரண்யம் பகுதி, ஆறுகாட்டுத்துறையில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்க சென்ற ஐந்து மீனவர்களை கடற் கொள்ளையர்கள் தாக்கி, அவர்களிடம் இருந்த இரண்டு ஜிபிஎஸ் கருவிகள், அலைபேசி கருவி, ஸ்மார்ட் கருவி, பிடித்து வைத்திருந்த நண்டு மற்றும் மீன்களை அள்ளிச் சென்றுள்ளனர்.

இந்திய கடல் எல்லைக்குள் மீன் பிடிக்க செல்லும் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படையும், கடற் கொள்ளையர்களும் தாக்குவதும், கைது செய்து அழைத்துச் செல்வதும், அவர்களிடம் இருந்து பறித்துச் செல்வதும், படகுகள், வலைகள், உள்ளிட்ட வாழ்வாதாரக் கருவிகள் அனைத்தையும் சேதப்படுத்துவதும் நாள் தோறும் நடக்கும் நிகழ்வாகி விட்டது. இலங்கை கடற்படை, கடல் கொள்ளையர்களின் தொடர் அட்டூழியம் தமிழ்நாட்டு மீனவர் சமுதாயத்தில் கடும் கொந்தளிப்பையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டு மீனவர்கள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படவும், அச்சமின்றி மீன்பிடி தொழில் நடைபெறவும் ஒன்றிய அரசு அரசியல் உறுதியுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என திரும்பத் திரும்ப வலியுறுத்துப்படுகிறது. மீனவர் அமைப்புகள், அரசியல் கட்சிகள் மட்டும் அல்லாது தமிழ்நாடு முதலமைச்சரும் திரும்பத் திரும்ப பிரதமர் மோடி அவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதி வருகின்றனர். ஆனால் இவை அனைத்தும் "செவிடன் காதில் ஊதும் சங்கு போல்" பயனற்று போவதும் மீனவர்கள் தினந்தோறும் தாக்கப்படுவது, கொல்லப்படுவது என்ற செய்திகள் வெளியாகி வரும் நிலையில்,

மீனவர் நலன் பாதுகாக்க அரசியல் உறுதியுடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய ஒன்றிய அரசும், அயலுறவுத்துறையும் அலட்சியம் காட்டி வருவதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. இதுவரை இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களை நாட்டிற்கு திரும்ப அழைத்து வரவும் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகள், வலைகள் உள்ளிட்ட உபகரணங்களை மீட்டுத் தரவும் இலங்கை அரசுடன் ராஜியரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அமலாக்கத்துறைக்கு நோட்டீஸ்

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் ஜார்க்கண்ட் முதல்வராக இருந்த ஹேமந்த் சோரனை அமலாக்கத்துறை கைதுசெய்தது. இந்த கைது நடவடிக்கையை எதிர்த்து சோரன் ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் அமலாக்கத் துறை பதிலளிக்க உத்தர விட்டு அடுத்தகட்ட விசாரணையை பிப்ரவரி 12ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

# சிறிய இரத்த பரிசோதனை நிலையங்களை பாதுகாத்திட வேண்டும்!

## பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச்சங்கம் வலியுறுத்தல்!




சிறிய ரத்த மருத்துவ பரிசோதனை நிலையங்களை பாதுகாத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும், “நெக்ஸ்ட்” தேர்வு திணிப்பை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மற்றும் பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது.

இரத்த மருத்துவ பரிசோதனை நிலையங்களை முறைப்படுத்திட, தனி கவுன்சிலை தமிழ்நாடு அரசு உருவாக்கிட வேண்டும் என பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கம் கடந்த 23 ஆண்டுகளாகப் போராடி வருகிறது.

பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் போராட்டங்களின் காரணமாக, கவுன்சில் அமைப்பதற்கான அரசாணை எண் 417 யை , 30.12.2009 அன்று வெளியிடப்பட்டது. ஆனாலும், கவுன்சில் அமைக்கப்படவில்லை.

தற்பொழுது தமிழ்நாடு துணைமருத்துவம் மற்றும் மருத்துவ நலம் சார்ந்த தொழில்களுக்கான கவுன்சில் என்ற பெயரில், ஒரு கவுன்சிலை உருவாக்கி அதில் மருத்துவப் பரிசோதனை நிறுவனங்களை முறைப்படுத்தவும், லேப் டெக்னீசியன்களை பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது வரவேற்புக்குரியது.

இருப்பினும், தமிழ்நாடு அரசின், அரசாணை எண் 417 அடிப்படையில் இரத்தப் பரிசோதனை நிலையங்களுக்கென தனியாக, கவுன்சில் அமைக்கப்படாதது வருத்தத்தை தருகிறது.

ஒன்றிய அரசின், துணைமருத்துவம் மற்றும் மருத்துவ நலம் சார்ந்த தொழில்களுக்கான தேசிய ஆணையச் சட்டமே இதற்குக் காரணம். ஒன்றிய அரசு, கார்ப்பரேட் பரிசோதனை நிறுவனங்களுக்குச் சாதகமாக இந்த ஆணையச் சட்டத்தை கொண்டு வந்துள்ளது.

ஒன்றிய அரசின், இந்த தேசிய ஆணையச் சட்டத்தின் அடிப்படையில், தொடங்கப்படவுள்ள, தமிழ்நாடு துணைமருத்துவம் மற்றும் மருத்துவ நலம் சார்ந்த தொழில்களுக்கான கவுன்சில் மூலம், சிறிய இரத்தப் பரிசோதனை நிலையங்கள் மூடப்படும் நிலை உருவாகிவிடக் கூடாது.

இவற்றை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு துணை மருத்துவம் மற்றும் மருத்துவ நலம் சார்ந்த தொழில்களுக்கான கவுன்சிலுக்கான விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

இத்தகைய நிலையில், தமிழ்நாடு துணைமருத்துவம் மற்றும் மருத்துவ நலம் சார்ந்த தொழில்களுக்கான கவுன்சில் கார்ப்பரேட்டுகளின் கைப்பாவையாக மாறி விடாமல் காக்கும் பொறுப்பு தமிழ்நாடு அரசுக்கு உள்ளது.

எங்கள், ஆய்வகங்களில் பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களும், வேதி பொருட்களும் முறையான அரசு அனுமதி பெற்ற நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. அவைகள் முறையாக பராமரிக்கப்படுகின்றன.

ஏற்கனவே, தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள மருத்துவ நிறுவனங்கள் ( பதிவு மற்றும் ஒழுங்குமுறை ) சட்டத்தின் (Clinical Establishment Act) படி அனைத்து சிறிய மருத்துவப் பரிசோதனை நிறுவனங்களும் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது போன்று முறையாக செயல்பட்டு வரும் சிறு, குறு மற்றும் நடுத்தர பரிசோதனை நிறுவனங்களை தரமற்றவை என சித்தரிப்பதற்கு , கார்ப்பரேட் நிறுவனங்களின் பொருளாதார நலன்களே காரணமாகும்.

தற்பொழுது அமைக்கப்பட உள்ள, தமிழ்நாடு துணை மருத்துவம் மற்றும் மருத்துவ நலம் சார்ந்த தொழில்களுக்கான கவுன்சிலில், 25 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும், எங்களது, பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நல சங்கத்திற்கு, உரிய பிரதிநிதித்துவம் அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தேசிய மருத்துவ ஆணையம் (NMC), “நெக்ஸ்ட் (NExT) தேர்வை 2019 ஆவது ஆண்டு பேட்ச் மருத்துவ மாணவர்களுக்கு, 2023 ஆம் ஆண்டு முதல் கட்டாயமாக நடத்தப்படும் என்று அறிவித்தது.

இதற்கு , சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம், தமிழ்நாடு பல் மருத்துவ மாணவர்கள் சங்கம் போன்ற சங்கங்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தன. அவை நடத்திய போராட்டத்தால், நெக்ஸ் தேர்வு நடத்தும் முடிவை என்.எம்.சி நிறுத்தி வைத்தது.

பின்னர், 2020 ஆம் ஆண்டு பேட்ச் மாணவர்கள் 2025 ஆம் ஆண்டு “நெக்ஸ்ட் “தேர்வை கட்டாயமாக எழுத வேண்டும் என்று என்.எம்.சி கூறியது.

இதைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தார். பிரதமருக்கு , “நெக்ஸ்ட்” தேர்வை திணிக்கக்கூடாது என்று கடிதமும் எழுதினார்.

“நெக்ஸ்ட் “ தேர்வு என்பது மாநில உரிமைக்கும்,கூட்டாட்சி கோட்பாட்டிற்கும், மருத்துவ மாணவர்களின் உரிமைக்கும் எதிரானது. மருத்துவக் கல்வியின் தரத்தை குறைக்கும். தரமற்ற மருத்துவர்கள் உருவாக வழி வகுக்கும். எனவே, “நெக்ஸ்ட்” தேர்வு நடத்தும் முடிவை , முழுமையாக,உடனடியாக, தேசிய மருத்துவ ஆணையம் கைவிட வேண்டும். இவ்வாறு கூறினார்.

இன்றைய ஊடவியலாளர் சந்திப்பில், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், மாநிலச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி, பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் எஸ்.தனவந்தன், பி.காளிதாசன், பாரா மெடிக்கல் லேப் மற்றும் கல்வி நல சங்கத்தின் பொறுப்பாளர்கள் கே.ராஜ் குமார், என்.சரவணன், எஸ்.ஆறுமுகம் ஆகியோர் உடன் இருந்தனர்.

### மனிதர்களை மதம் சார்ந்து பிளவுபடுத்தும் தீர்ப்பு

# உடனடியாக மேல்முறையீடு செய்க!

**இரா.முத்தரசன் கோரிக்கை!**

மனிதர்களைமதம்சார்ந்துபிளவுபடுத்தும் தீர்ப்பு உடனடியாக மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

சென்னை உயர் நீதி மன்றத்தின் மதுரைக் கிளை 30.01.2024 அன்று இந்து சமய கோவில்களில், இந்து சமயம் சாராதவர்களை அனுமதிக்கக் கூடாது என தீர்ப்பு வழங்கியுள்ளது. இது தமிழ்நாட்டில் சமய எல்லைகள் கடந்து அனைத்து சமய நம்பிக்கைகளையும் சமமாக கருதியும், மதித்தும் வருகிற நல்லிணக்க பண்புக்கு எதிரானது.நாகூர் தர்க்காவிலும், அன்னை வேளாங்கன்னி தேவாலயத்திற்கும், பழநி திருக்கோவிலுக்கும், அனைத்து சமய நம்பிக்கை உள்ளவர்களும் சென்று வருவது வழிவழியான பழக்கமாக உள்ளது. இதன் மூலம் சமய வழிகள் வேறுபட்டாலும் எல்லா சமயங்களும் அன்பு, கருணை, இரக்கம் சகிப்புத் தன்மை என நல்லிணக்க உணர்வை தான் போதிக்கிறது என வேதங்களையும், சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்த சுவாமி விவேகானந்தர், வள்ளலார், இராமானுஜர் போன்ற சமய சான்றோர்கள் போதித்தும் வாழ்ந்தும் காட்டியுள்ளனர்.

இந்த ஆன்மிக வரலாற்று மரபுகளை கருத்தில் கொள்ளாமல், உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வழங்கியுள்ள தீர்ப்பு சமூகத்தில் பகைமை வளர்க்கும் பிளவு சக்திகளை ஊக்கப்படுத்தும் போபத்தானது. எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் இத் தீர்ப்பை வழங்கிய நீதியரசர் மறுபரிசீலனை செய்து தீர்ப்பை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்துவதுடன் இந்து சமய அறநிலையத் துறையும், தமிழ்நாடு அரசும் இத்தீர்ப்பை செயல் இழக்க செய்ய உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தருமபுரியை வறட்சி மாவட்டமாக அறிவிக்க விவசாயிகள் சங்க மாவட்ட மாநாடு கோரிக்கை!

தமிழ்நாடு விவசாயிகள் சங்க தருமபுரி மாவட்ட 27வது மாநாடு தருமபுரியில் நடைபெற்றது. மாநாட்டிற்கு மாவட்டத்தலைவர் ஜி.விடுதலைவிரும்பி தலைமை வகித்தார்.மாவட்ட செயலாளர் எஸ்.சின்னசாமி வேலை அறிக்கை வைத்து பேசினார்.சங்கத்தின் மாநில துணை செயலாளர் எம்.லகுமய்யா சங்க கொடியை ஏற்றி வைத்தார்.மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கே.புள்ளாறு வரவேற்றார்.

மாநில தலைவர் எஸ்.குணசேகரன் இன்றைய அரசியல் நிலை குறித்து சிறப்புரையாற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன்,மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் கா.சி.தமிழ்க்குமரன்,எம். மாதேஸ்வரன்,மாதர் சங்க மாவட்ட செயலாளர் எஸ்.கமலாமூர்த்தி, ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.

மாநாட்டில் விவசாய விளை பொருட்களுக்கு கட்டுபடியான விலையை நிர்ணயம் செய்ய வேண்டும்.வரும் நிதி ஆண்டில் ஒகேனக்கல் உபரிநீர் திட்டத்தை அறிவித்து மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளுக்கும் ஒகேனக்கல் உபரிநீரை நிரப்பும் திட்டத்தை தொடங்க வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளில் உள்ள கருவேல மரங்களை அகற்றி தூர்வார வேண்டும்.தருமபுரி மாவட்ட விவசாயிகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு சிறப்பு நிதி வழங்க வேண்டும்.


தருமபுரி மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவித்து இழப்பீடு வழங்கவேண்டும்.

அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் உழவு கருவிகளை மான்யம் மூலம் வழங்க வேண்டும்.

கால்நடைகளுக்கு இலவசமாக தீவனபுல் வழங்கவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்டத்தலைவராக ஜி.விடுதலைவிரும்பி, மாவட்ட செயலாளராக எஸ்.சின்னசாமி, மாவட்ட பொருளாளராக ஜே.ஆர்.முனிராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் 45 பேர் கொண்ட புதிய மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டனர்.

இறுதியில் கே.டி.இராசு நன்றி கூறினார்.

# முன்னாள் நீதிபதி சந்துரு கேள்வி!



நீதிபதி ஸ்ரீமதி இந்துக் கோவில்களில்கொடிமரத்தை (துவஜஸ்தம்பம்) தாண்டி இந்துக்கள் அல்லாதவர்கள் செல்லக்கூடாதென்று உத்திரவிட்டுள்ளார்கள்.

ஆனால் யார் “இந்து” என்று சொல்வதிலேயே குழப்பம் உள்ளது.

1936 வரை மனு தர்மத்தின் படி தலித் மக்களை இந்துக்களாக ஏற்றுக் கொள்ளவில்லை (அவர்ணர்).

அதற்கு முன்பு நாடார் இனத்தவரை ஏற்றுக்கொள்ளவில்லை (சவர்ணத்தில் இருந்தாலும்).

ஆகம விதிப்படி பிராமணர்களில் ஒரு பிரிவினர் (ஸ்மார்த்தர்கள்) கொடிமரத்தைத் தாண்டி கோவிலுக்குள் வரக்கூடாது.

ஏனென்றால் அவர்கள் சிலை வழிபாட்டில் நம்பிக்கையற்ற அத்வைத பிரிவைச் சார்ந்தவர்கள்.

அவர்கள் தங்களையே பிரம்மன் என்று நம்புபவர்கள்.


(அஹம் பிரம்மாஸ்மி)

இப்ப இவர்களையும் நீதிபதி அம்மா தடைசெய்வார்களா?

அவர்கள் தான் கர்மாவை நம்புவதாக ஒரு தீர்ப்பில் சொல்லி இருக்கின்றார்கள்.

எனவே இதையும் அவர்கள் தனது கர்மாவாக நினைத்து விடை கூறலாம்.”

# பால்விலை உயர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம்!




மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள ஸி.985 மணப்பாறை பால் உற்பத்தி கூட்டுறவுசங்கவாளகம் அருகில், அரசு உத்தரவு இல்லாமல் பொது மக்களுக்கு விற்கும் பால் விலை 45 தில் இருந்து 50 ரூபாயக உயர்த்தியதை திரும்ப பெற வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மணப்பாறை நகரகுழு சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இவ் ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர்மன்ற உறுப்பினர் தங்கமணி தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாய சங்க மாநில துணைச் செயலாளர் இந்திரஜித், அரசு போக்குவரத்து கழக ஏஐடியூசி மாநில துணை பொது செயலாளர் சுப்ரமணியன், கட்சி நகர செயலாளர் ஜனசக்தி உசேன், நகர்மன்ற உறுப்பினர் மனோன்மணி ஆகியோர் உரை நிகழ்தினார்கள். பால் விலை 45 தில் இருந்து 50 ரூபாயக உயர்த்தியதை திரும்ப பெற வலியுறுத்தி முழக்கம் மீட்டனர்.

# தமிழகத்திற்கு பேரிடர் நிதி கோரி ஆர்ப்பாட்டம்!

புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு பேரிடர் நிவாரண நிதி வழங்க வலியுறுத்தி தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் தாலுக்கா அலுவலகம் முன்பு தாலுகா செயலாளர் பி. சோலையப்பன் தலைமையில், நகர செயலாளர் வி. முனுசாமி முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை விளக்கி மாவட்ட துணை செயலாளர் பி. பாலமுருகன், விவசாய சங்க மாநில துணை செயலாளர் எஸ். நல்லையா, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் வி. கிருஷ்ணமூர்த்தி, எஸ். சேது, கனகராஜ், விவசாய சங்க தாலுகா செயலாளர் ஆர். ரவீந்திரன் உள்ளிட்ட ஏராளமான ஊர் பங்கேற்றனர்.

## சுமை தூக்கும் தொழிற்சங்க தலைவர் ஆர்.பெருமாள் நினைவு தினம்!

தமிழ்நாடு சுமைதூக்கும் தொழிலாளர் சங்க முன்னாள் தலைவரும், ஏஐடியுசி சங்க முன்னாள் தேசியக்குழு உறுப்பினருமான ஆர்.பெருமாள் அவர்களின் 10வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு திருவாரூர் நவீன அரிசி ஆலை முன்பு நடைபெற்றது.

ஏஐடியுசி மாவட்ட தலைவர் ஜெ.குணசேலரன் தலைமை ஏற்றார். மாவட்ட செயலாளர் ஆர்.சந்திரசேகர ஆசாத், சிஐடியு மாவட்ட தலைவர் அனிபா, மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்கள். ஏஐடியுசி மாவட்டக்குழு உறுப்பினர்கள் வி.தர்மதாஸ், கே.பாலதண்டாயுதம், பி.சின்னதம்பி ஆகியோர் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினார்கள். சுமைதூக்கும் தொழிலாளர் சங்க செயலாளர் பாலு நன்றி கூறினார்.

## மகாத்மா காந்தி நினைவு நாள்!



தேசத் தந்தை மகாத்மா காந்தியின் நினைவு நாள் கட்சியின் சார்பில் கடைபிடிக்கப்பட்டது.

**சேலம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்டக் குழுவின் சார்பில் மகாத்மா காந்தியின் நினைவு நாளையொட்டி மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது.

**புதுக்கோட்டை:** தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்களின் நினைவு நாளை ஒட்டி புதுக்கோட்டை காந்தி பூங்காவில் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் வீரபாண்டியன் பங்கேற்று சிறப்பித்தனர்.

## நியூ செஞ்சுரி பள்ளியில் குடியரசு தின விழா

இந்திய நாட்டின் 75 ஆவது குடியரசு தின விழா அம்பத்தூர் நியூ செஞ்சுரி பள்ளியில் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் புவனேஸ்வரி தலைமை தாங்கினார். பள்ளியின் மேலாளர் முத்துக்குமாரசாமி முன்னிலை வகித்தார். தேசிய கொடியை ஏ.ஐ.டி.யு.சி. மாநில நிர்வாக குழு உறுப்பினர் இரா.துரைசாமி ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் முன்னாள் மண்டல மேலாளர் என். கோபிநாதன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

### வினாடி - வினா விடைகள்

1. 1930 ஏப்ரல் 18
2. சூர்யா சென்
3. சிறையில் சித்ரவதை செய்து கொன்ற பிறகு, பிணத்தை தூக்கிலிட்டனர். (1934 சனவரி 12)
4. பிரிட்டிஷ் போர்க் கப்பலில் எடுத்துச் சென்று நடுக்கடலில் வீசினர்.
5. லீக் ஆப் நேஷன்ஸ்
6. எலும்புகள்

# மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்!



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் போதிய தண்ணீர் இல்லாமல் கருகி வரும் சம்பா பயிர்களுக்கும், தாளடி பயிர்களுக்கும் உடனடியாக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்கின்ற கோரிக்கை முழக்கத்தோடு தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் ஒன்றிய தலைவர் டி.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாவட்ட துணை செயலாளர் கே.ஆர்.ஜோசப் கோரிக்கைகளை விளக்கி பேசினர். ஆர்ப்பாட்டத்தில் விவசாய சங்கத்தின் முன்னணி தலைவர்களும், விவசாய தொழிலாளர் சங்கத்தின் முன்னணி தலைவர்களும் பங்கேற்றனர்.

தாளடி மற்றும் சம்பா பயிர்கள் கதிர் வரும் நிலையிலும், கதிர் வந்து நீர் இல்லாத காரணத்தால் பதறாகும் நிலையிலும் தற்பொழுது உள்ளது. தற்பொழுது அணையில் போதுமான நீர் இருப்பில் உள்ளது. அணை திறப்பு முறைகளை பார்க்காமல் அணையிலிருந்து உடனடியாக தண்ணீர் திறந்து பயிர்களை காப்பாற்றிட வேண்டும் அல்லது சம்பா, தாளடி பயிர்களுக்கு நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.35,000 இழப்பீடு வழங்கிட வேண்டும் என்கின்ற கோரிக்கையை வலியுறுத்தப்பட்டது.

## முறைகேடுகளை களையக்கோரி கள்ளக்குறிச்சியில் ஆர்ப்பாட்டம்.

கள்ளக்குறிச்சியில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில், ஆட்சியர் அலுவலகம் முன்பு வட்ட செயலாளர் மஞ்சப்பன் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் மாவட்ட செயலாளர் கே. ராமசாமி, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்ட செயலாளர் மா. வெங்கடேசன், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் ராமன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன உரையாற்றியனர்.

கள்ளக்குறிச்சி ஒன்றியத்துக்குட்பட்ட விளம்பார் ஊராட்சியிலும், திருநாவலூர் ஒன்றியத்துக்குட்பட்ட திருநாவலூர் ஊராட்சியிலும் தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், பிரதமர் வீடு கட்டும் திட்டம், குடிநீர் பராமரிப்பு, 15வது நிதி குழு வேலைகள், மின்விளக்கு உபகரணங்கள், குளம், குட்டை, ஏரிகளில் அரசு விதிமுறைகளை மீறி மண் எடுப்பது போன்ற ஊழல் முறைகேடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க கோரினர்.

## மூத்த தோழர் எம்.கோதண்டம் படத்திறப்பு!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவொற்றியூர் பகுதி மறைந்த மூத்த தோழர் எம்.கோதண்டம் அவர்களின் படத்திறப்பு நிகழ்வு, திருவொற்றியூர் கிளை சார்பாக கிளைச் செயலாளர் எம்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

அருள் ஞானமூர்த்தி வரவேற்புரை ஆற்றினார். எஸ்.பி.ஆண்டியப்பன், பட்டுராஜ் கே.ஜீவானந்தம், எம்.கொண்டையா, சலீம் ஷாஜகான், ஆர்.மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சி.பி.ஐ. வட சென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி படத்தை திறந்து வைத்தார்.

சி.பி.ஐ. மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், நீதியரசர் எம்.ஆர்.வேல்ராஜ், சி.பி.ஐ.எம். வீரா அருண், சி.பி.ஐ.எம். செயற்குழு உறுப்பினர் ஆர்.ஜெயராமன் எம்.சி ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர்.

சந்திரசேகரன் நன்றி கூறினார்,

# வரலாற்று தூண்டுகோல் ஜீவா!

அப்போது தெரியவில்லை!
தமிழ்நாட்டின் தென் கோடியில்
செங்கொடிவீரன் உதிக்கிறான் என்று,

அப்போது தெரியவில்லை!!
குலதெய்வம் வரம் அளித்த
சொரிமுத்து ஐய்யனார்
பின்நாளில் நாத்திகம் பேசுவான் என்று!

அப்போது அவனுக்கும் தெரியவில்லை!!
குருதியின் வண்ணம் அவனை
பின்நாளில் ஆளபோகிறது என்று,

ஒரு ஆச்சர்யம் சொல்லட்டுமா!
பதினைந்து வயதில் ஒருவன்
காதல் கவிதை எழுதுவான் என்றால்

இவனும் காதல் கவிதை
எழுதுகிறான்,
ஆனால் இவனது காதல்
காந்தி மீதும்!
கதரின் மீதும்!

காந்தியவாதியாக
இருக்கிறான்!
சுயமரியாதை இயக்க
வீரனாகிறான்!
தமிழ் பற்றாளனாகிறான் !

ஒரு ஆளுமைமிக்க
பேச்சாளான் !!
இவன் கம்பனின் கவிகுயில்
!!
இவன் கவர்ச்சி குரல் கண்டு
ஒலிவாங்கி மயங்கி நிற்கும்!

கடைசிவரை நாணயம்
என்கின்ற
நாணயத்தை மட்டுமே தன் சட்டை பையோடு
ஒட்டிவைத்து கொண்ட நேர்மையாளன்!!

சட்டமன்றமே நடுங்கியது
இவனின் உரையாடல் கண்டு...

கம்யூனிஸ பேரியக்கத்திற்கு
இந்த மாமனிதன் விட்டுசென்ற
இரண்டு வாரிசுகள்
ஒன்று "ஜனசக்தி"
மற்றொன்று "தாமரை"

சொன்னால் நம்ப முடிகிறதா?
ஒரு சட்டமன்ற உறுப்பினரிடம்
மாற்று உடை இல்லை என்றால்!!



அவன் நேசித்த மக்களால்
அரசியலுக்கு அப்பாற்பட்டு
ஒருவன் தலைவனகிறான்
அவனை "தோழர் ஜீவா" என்றழைத்து
உலகமே போற்றுகிறது.

வழிகாட்டும் தலைவன் என்றால்
அவன் அடுத்த தலைமுறைக்கு
வரலாறாக மாறுவதுதான்!

நூறு ஆண்டுகளுக்கு பிறகும்
உன்னைபற்றி இந்த நூற்றாண்டிலும்
என்னை எழுத தூண்டியதற்கு நன்றி,

**ஆர்த்தி உலகநாதன்**
திருத்துறைப்பூண்டி முன்னாள்
சட்டமன்ற உறுப்பினர்
கே.உலகநாதன்
அவர்களின் மகள்
தொடர்புக்கு: 8098024275

# பேச்சுவார்த்தையை உடனே துவங்க போக்குவரத்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்!



போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனம் ஏ.ஐ.டி.யு.சி. சார்பில் மாநிலம் தழுவி ஆர்ப்பாட்டம் தஞ்சாவூர் ஜெபமாலைபுரம் கிளை முன்பு நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மத்திய சங்கத் தலைவர் என்.சேகர் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன் முன்னிலை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி சம்மேளனத்தின் துணைத் தலைவர் துரை.மதிவாணன், ஓய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாதுரை, பொருளாளர் எஸ்.பாலசுப்பிர மணியன், மாநில குழு உறுப்பினர் டி.கஸ்தூரி, ஓய்வு பெற்றோர் சங்க தலைவர் மல்லி.ஜி.தியாகராஜன் உள்ளிட்டார் உரையாற்றினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் செப்டம்பர் 2023 முதல் பேசி முடிக்கப்பட வேண்டிய 15 வது ஊதிய உயர்வு ஒப்பந்தம் உடனடியாக பேசி முடித்து சம்பள உயர்வு அமல்படுத்த வேண்டும், பணியில் உள்ள தொழிலாளர்களின் 18 மாத கால அகவிலைப்படி உயர்வு உடனடியாக வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது.

# திருப்பூர் கார், வேன், ஆட்டோ சங்க பெயர்பலகை திறப்பு விழா!



திருப்பூர் மாநகர், ஊத்துக்குளி ரோடு, பாளையக்காடு மேம்பாலம் அருகில் கார்,வேன், ஆட்டோ, ஆம்புலன்ஸ், கிரேன் உள்ளிட்ட மோட்டார் வாகன தொழிலாளர்கள், வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் உள்ளிட்டோர், திருப்பூர் மாவட்ட ஏஐடியூசி தனியார் மோட்டார் தொழிலாளர் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

அங்கு கிளை அமைக்கப்பட்டது. தலைவராக ஏ.மணி, செயலாளராக ஏ.யுவராஜ், பொருளாளராக ஆர்.சங்கர், துணைத் தலைவராக சி.ராசு, துணை செயலாளராக ஆர்.ரமேஷ்குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு, சங்க பெயர் பலகை திறப்பு விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் திருப்பூர் மாநகராட்சி, துணை மேயர் ஆர்.பாலசுப்பிரமணியம், கட்சி மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி ஆகியோர் சங்க பெயர் பலகைகளை திறந்து வைத்தனர். ஏ.ஐ.டி.யு.சி. மாவட்ட பொதுச்செயலாளர் பி.ஆர்.நடராஜன் எக்ஸ் எம்சி., மோட்டார் சங்க மாவட்ட தலைவர் வி.எஸ்.சசிகுமார், மோட்டார் சங்க மாவட்ட பொதுச் செயலாளர் கே.சுரேஷ், ஜெனரல் சங்க தலைவர் சி.பழனிச்சாமி, பனியன் சங்க பொதுச் செயலாளர் என்.சேகர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மூன்றாவது மண்டல குழு செயலாளர் ஆர்.செந்தில்குமார் உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

# எண்ணூர் மக்கள் பாதுகாப்புக் குழு இரா.முத்தரசன் அவர்களுடன் சந்திப்பு!

அமோனியா கசிவு ஏற்படுத்திய எண்ணூர் கோரமண்டல் உர உற்பத்தி தொழிற்சாலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி, கடந்த 35 நாட்களாக தொடர்ந்து போராடி வரும் எண்ணூர் மக்கள் பாதுகாப்பு குழு. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் அவர்களை சந்தித்து தங்கள் போராட்டத்தின் கோரிக்கையை சட்டமன்றத்தில் எடுத்துரைக்க வலியுறுத்தி மனு கொடுத்தனர்.

இது குறித்து செய்தியாளர்களிடம் இரா.முத்தரசன் பேசுகையில் கடந்த டிசம்பர் 26, நள்ளிரவில் எண்ணூர் பெரியகுப்பம் பகுதியில் உள்ள கோரமண்டல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் என்கிற உரம் தயாரிக்கும் நிறுவனத்தில் இருந்து வெளியேறிய, அளவுக்கு அதிகமான அம்மோனியா கசிவால். அதை சுற்றி உள்ள பகுதி மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டு 53 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

இந்த நிலையில் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு அந்த நிறுவனத்தை தற்காலிகமாக மூடியது. இன்று வரை மூடப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக அந்தப் பகுதியைச் சார்ந்த 33 கிராம மக்கள் மீனவர்கள் மற்றும் மீனவர்கள் அல்லாதோர் என அனைவரும் இந்த ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என தொடர்ச்சியாக 35 நாட்களாக போராடி வருகிறார்கள்.



கடந்த ஜனவரி 2 ஆம் தேதி போராட்ட களத்திற்கு சென்று ஆதரவு தெரிவித்து வந்தோம். பிற அரசியல் அமைப்புக்களை சார்ந்தவர்களும் ஆதரவு தெரிவித்தனர். தமிழகத்தில் உள்ள முக்கிய அரசியல் கட்சிகளையும், அதன் தலைவர்களையும் சந்தித்து வருகிற தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தில் அவரவர் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் பேச வேண்டும் என்கிற கோரிக்கை மனு கொடுத்துள்ளனர்.

அவர்களின் கோரிக்கையை ஏற்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் நிச்சயம் இது தொடர்பாக வருகிற சட்டமன்ற கூட்டத் தொடரில் பேசுவார்கள் என்று கூறினார்.

# குடிமனை பட்டா வழங்க கோரி ஆர்ப்பாட்டம்!

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, எலச்சிபாளையம் ஒன்றியம், பெரியமணலி பகுதியில் வாழும் 233 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைக்கான நிலம் வழங்கிட வேண்டி போராடி வருகின்றனர். பல்வேறு கட்ட போராட்டம் நடத்தியும் எந்த ஒரு பயனும் இல்லாததால் கண்டன ஆர்ப்பாட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் க.அன்புமணி தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் என்.செல்வராஜ், சிபிஐ ஒன்றிய செயலாளர் கே.சிவகுமார், சிபிஐ மாவட்ட குழு தோழர்கள் எஸ்.நல்லமுத்து, எம்.செங்கோட்டுவேலு, நாமக்கல் மாவட்ட பொதுத் தொழிலாளர்கள் சங்க மாவட்ட செயலாளர் ஆர்.கோபிராஜ் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி



தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின திருவள்ளூர் மாவட்ட குழு உறுப்பினர் செங்குன்றம் மதி அவர்களின் புதல்வி திலகவதி பிறந்த நாளை முன்னிட்டு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணு அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்பொழுது ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூபாய் ஆயிரம் வழங்கினர். உடன் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் லி. உதயகுமார், விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன், மாவட்ட துணை செயலாளர் எம். பி. குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

### கோவை சூலூரில்

# இரத்ததான முகாம்!



கடந்த 25 ஆண்டுகளாக பாலதண்டாயுதம் இரத்த தான இயக்கம், முகாம்கள் மூலமும். மருத்துவமனைக்கு நேரடியாக சென்றும் தொடர்ந்து இரத்த தான சேவையாற்றி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக ஜீவா நினைவு நாளை முன்னிட்டு, கோவை செல்வராஜபுரம் ஜீவா இல்லத்தில் இரத்த தான இயக்க நிர்வாகக்குழு உறுப்பினர் ஜி.ஆர்.மணி தலைமையில் 36வது இரத்த தான முகாம் நடைபெற்றது. இந்திரா ஜவஹர் குத்துவிளக்கேற்றி வைத்தார்.

முகாமில் இரத்த தான இயக்க தலைவர் பெ.மௌனசாமி, செயலாளர் வே.வசந்தகுமார், மௌ.குணசேகர், நிர்வாகிகள் கே.வினோத்கன்னா, எஸ்.கோபால், ர.மாலதி, மா.சரோஜினி, வி.பாலசுந்தரம், சி.கே.எஸ்.முரளிதரன் உள்ளிட்டோர் முன்னின்று முகாவை நடத்தினார்.

# பொது வேலை நிறுத்தத்தை விளக்க தெருமுனை பிரச்சாரம்

பிப்ரவரி 16 அன்று நடைபெற உள்ள பொது வேலை நிறுத்தத்தை விளக்கி13அம்ச கோரிக்கைகளை முன்வைத்து தெருமுனை பிரச்சாரக் கூட்டம், மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாயிகள் ஐக்கிய முன்னனி சார்பில் பிப்ரவரி 1 மாலை 6 மணி அளவில் ஆண்டாள் தெருவில் நடைபெற்றது. சிஐடியு மாநகர தலைவர் சீனிவாசன் தலைமை தாங்கினார். தொமுச செயலாளர் ஜோசப் நெல்சன் ,ராமலிங்கம், ஏஐடியுசி பொதுச் செயலாளர் க.சுரேஷ், சிவா, சிஐடியு சார்பில் பொதுச் செயலாளர் ரங்கராஜன், எச்எம்எஸ் ஜான்சன், ஐஎன்டியுசி சாய்நாதன், ஐக்கிய விவசாயிகள் முன்னணி சம்சுதீன் ஆகியோர் உரையாற்றினர்.சிஐடியு மணிகண்டன் நன்றி கூறினார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 150. ஆற்றலும் அறிவும்

**ஆற்றல் அறிவுக் கிடையில்லை ஆற்றுக்**
**கடுத்திருத்த லாகும் அறிவு.**

செயலுக்கும் செயலினால் பெறப்படும், அறிவுக்கும் இடைவெளி இல்லை. ஆயினும் செயல்தான் முதன்மை, அதை ஒட்டிப் பிறப்பது அறிவு.

**செய்ச்செய சேருவ தறிவஃதல்லது**
**பொய்யறி வென்று புகல்.**

செயலில் இருந்து பெறுவதுதான் நல்லறிவு. செயலின்றிபெறும் அறிவு பொய்யறிவாகும்.

# மதமும் மார்சியமும்



எஸ்.தோத்தாதிரி

**இன்றைய காலக்கட்டம் மிகவும் முன்னேறிய ஒன்றாகும். ஒவ்வொரு துறையிலும் விஞ்ஞானத்தை பயன் படுத்தி, புதிய புதிய கருவிகளை கண்டுபிடித்து, தொழில் முன்னேற்றம் செய்கிறார்கள்.**

தொழில் முன்னேற்றம் அடையும் பொழுது இன்னும் புதிய தகவல்கள் கிடைக்கின்றன. இந்தத் தகவல்கள் அடிப்படையில் விஞ் ஞானம் முன்னேறுகிறது. ஆக, இது நடைமுறையை வளப்படுத்துகிறது. நடைமுறைக் கொள்கையைப பயன்படுத்துகிறது.

மதவாதிகள் கூட இன்றைய விஞ்ஞான கருத்துக்களை தங்களது கொள்கையை விளக்குவதற்கு பயன்படுத்துகிறார்கள். இந்த இயங்கியல் பொருள் முதல்வாத அணுகுமுறை இன்றைய விஞ்ஞானத்தில் இடம்பெறுகிறது.

ஆனால் விஞ்ஞானிகள் அவ்வாறு அல்ல. சோதனைச் சாலையோடு தங்களது விஞ்ஞான சிந்தனைகளை நிறுத்திக் கொள்கிறார்கள். இதன் விளைவாக அவர்கள் பல்வேறு வகையான கருத்து முதல்வாத சிந்தனைக்கு உள்ளாகி, அவர்களது கண்டுபிடிப்புகளுக்கு குழப்பமான விளக்கங்களை தருகிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் விஞ்ஞானிகள் மட்டுமல்ல பொதுவாக எல்லோர் மீதும் ஆதிக்கம் செலுத்துவது ‘மதம்‘ ஆகும்.

மதத்தைப் பற்றி மார்க்சும் எங்கல்சும் மூன்று நிலைபாடுகளை எடுத்துக்காட்டுகிறார்கள்

முதலாவது மதம் என்பது யதார்த்தம் பற்றிய வினோதமான பிரதிபலிப்பு ஆகும்

இரண்டாவது மதம் என்பது மக்களுக்கு கொடுக்கப்பட்ட அபினி என்பதாகும்.

மூன்றாவது மதம் என்பது அடக்கப்பட்ட மக்களின் பெருமூச்சு என்பதாகும்.

நான்காவதாக மதம் பற்றிய விமர்சனம் அதன் சமுதாய அடிப்படை பற்றிய விமர்சனம் ஆகும்.

முதலாவதாக கூறப்பட்ட உன்னதமான பிரதிபலிப்புஎன்பதுமிகவும்பழையகாலத்தில் பொருள்களுக்கு நெருக்கமாக இருந்தது. காடுகளில் வசித்த மனிதன் இயற்கை சக்திகளை கண்டு சில சமயங்களில் அஞ் சினான். இதன் விளைவாக அவற்றிற்குள் ஏதோ ஒரு சக்தி இருப்பதாக நம்பினான். இதற்கு மேலாக அவன் அதீத கற்பனையில் ஈடுபடவில்லை. இது அகநிலை காலகட்டம் என்று அழைக்கப்படுகிறது.

நீர்நிலைகளிலும், மரங்களிலும் இந்த ஆவிகள் இருப்பதாக நம்பப்பட்டது.



இத்தகைய நம்பிக்கை நமது சங்க காலத்திலும் உண்டு. இக்கட்டத்தில்



இந்த சக்திகள் அவனுடன் இருப்பதாக கருதினான். இவை அவனிடமிருந்து வேறுபட்ட அந்நியமான ஒன்றாக அவன் கருதவில்லை.

இத்தகைய நிலைப்பாட்டை இன்றும் கூட குலதெய்வ வழிபாடாக காணலாம். இந்தப் பிரதிபலிப்பானது நேரடியான பிரதிபலிப்பு ஆகும்.

ஆனால் இந்த புராதானமான சமூக அமைப்பு மாறுதல் அடைந்தது. ஆண்டாள் அடிமை சமுதாயம், நில உடமை சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் என்று வளர்ச்சியடைந்தது. இப்பொழுது எளிமையாக இருந்த கடவுள் நம்பிக்கை சிக்கலாக மாறுகிறது. ஆதிக்க வர்க்கம் இதனை வினோதமான ஒன்றாக மாற்றுகிறது. இப்பொழுது கடவுள்கள் சர்வ சக்தி பொருந்தியவராக காட்டப்படுகிறார்கள்.

ஒவ்வொரு கடவுளைச் சுற்றியும் கருத்தியல் படிமங்கள் உருவாக்கப்பட்டன. இந்தப் படிமங்கள் மதம் என்ற அமைப்பாக மாற்றம் பெறுகின்றன. இந்த மதமானது மேலிருந்து கீழாக உள்ள அனைவரையும் ஒரு கட்டுக்குள் வைக்கும் சாதனமாக மாறுகிறது. அதே சமயத்தில் ஆதிக்க சக்திகளுக்கு சொர்க்கத்தை காட்டுகிறது.. அடிமைப்பட்டவர்களுக்கு அது ஒரு மயக்கமான நிலையை உருவாக்குகிறது.

இதனைத் தான் மதம் மக்களுக்கு கொடுக்கப்பட்ட அபினி என்று மார்க்ஸ் கூறுகிறார். இந்த அபினி நிலை காரணமாக அடிமைப்பட்டு கிடக்கும் மக்கள் சொர்க்கத்தை அடைய வேண்டும் என்ற கனவையும் காண்கின்றனர்.

ஆனால் அவர்கள் இதை ஒரு பெருமூச்சாக வெளிப்படுத்துகின்றனர். இந்தநிலையில் மதத்தின் மூலமாக தங்களின் எதிர் குரலை வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். இதற்கு வரலாற்றில் பல உதாரணங்கள் தரலாம்.

நமது பக்தி மார்க்கம் ஒரு சிறந்த உதாரணம். எனவேதான் மார்க்சும் ஏங்கல்சும் மதத்தை விமர்சனம் செய்தனர். அது வெறும் கருத்தியல் விமர்சனம் மட்டுமல்ல. இந்த விமர்சனத்தின் மூலம் மதத்திற்கும் அதன் பின்னால் இருக்கும் சமுதாய அமைப்பையும் விமர்சனம் செய்தனர். இதனை ‘‘ஜெர்மனியில் விவசா யிகள் போராட்டம்‘‘ என்ற ஏங்கல்சின் நூலில் காணலாம்.

எனினும் மார்க்சியத்தை பொருத்தவரை மதம் பற்றிய விமர்சனம் என்பது வெறும் கருத்திய விமர்சனம் மட்டுமல்ல அதற்கான அடிப்படை சமுதாய விமர்சனமும் கூட. ஏனென்றால் இந்த அடிப்படையை மாற்றும் பொழுது மேற்கட்டுமானத்தில் வலுவான ஒரு பகுதியான மதத்தின் தன்மையும் மாறுபடும். மதத்திற்கான சமூக வேர்களை அழித்துவிட்டால் அது உதிர்ந்து விடும் என்பது மார்க்சியம் ஆகும்.

மதம் பற்றி மார்க்சியம் உருவாக்கிய இந்தக் கொள்கையை மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோர் இதனை நடைமுறைப்படுத்த படவேண்டிய வாய்ப்பு இல்லாமலேயே இருந்தன. ஆனால் லெனின் இதனை நடைமுறைப்படுத்த வேண்டிய இடத்தில் இருந்தார்.

எனவே வெறும் கருத்தியல் போராட்டமாக இதனை செய்யாமல், சமுதாய மாற்றத்தோடு இணைத்து செயல்படுத்தினார்.

லெனின் அதிகாரத்திற்கு வந்தவுடன் மடாலயங்களின் சொத்துக்களை அரசுடைமை ஆக்கினார். அதே சமயத்தில் அரசியலில் மதத்தை கலக்கக் கூடாது என்ற நிலைபாட்டையும் எடுத்தார். அரசியலோடு மதம் இணைந்தால் பெரும் குழப்பம் ஏற்படும் என்பது அவரது கருத்து. அதே சமயத்தில் மத நம்பிக்கையை எதிர்த்து அழிக்க வேண்டும் என்ற நிலைபாட்டையும் லெனின் எடுக்கவில்லை.

அதற்கு மாறாக மத நம்பிக்கை உள்ளவர்களுக்கு அவர் உரிய சுதந்திரம் கொடுத்தார். அதற்கு காரணம், காலம் காலமாய் மதம் மற்றும் மத நம்பிக்கை மக்கள் மனதில் ஊறிப்போன ஒன்று. அதனை சட்டத்தின் மூலம் அழித்து விட முடியாது என்பதற்கு ரஷ்ய விவசாயிகளைச் சுட்டிகாட்டினார்.

ரஷ்ய மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகள். இவர்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள். இவர்களிடம் நாத்திகப் பிரச்சாரம் செய்தால் இவர்கள் மிரண்டு விடுவார்கள். எனவே அதை தவிர்ப்பது சரியான பாதை என்று லெனின் எடுத்துக்காட்டினார். அவர் ஒரு உதாரணம் சொல்வார்.

இது தொழிற்சங்கம் பற்றியது. ஒரு தொழிற்சங்கத்தில் பாதிப்பேர் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கிறார்கள். போராட்டம் என்று வருகிற போது இறை நம்பிக்கை உள்ளவர்களை எதிர்த்து பிரச்சாரம் செய்தால் தொழிற்சங்க ஒற்றுமை குலைந்து விடும். படிப்படியாகத்தான் அவர்களை மாற்ற முடியுமே தவிர வலுக்கட்டாயமாக மாற்ற முடியாது.

ஏனென்றால் ஒரு நம்பிக்கை சார்ந்த விசயம் இது. இங்கு கருத்தை திணிக்க முடியாது என்றார் லெனின். மற்றொரு விஷயத்தையும் சொன்னார். கட்சிக்குள் இறை நம்பிக்கை உள்ளவர்களை அனுமதிக்கலாம்; ஆனால் அவர்கள் கட்சி விதிகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்பதில் கறாராக இருக்க வேண்டும் என்றார் லெனின்.

இந்த அணுகுமுறை நடைமுறை சார்ந்தது. மார்க்சிய கொள்கையோடு பொருந்தக்கூடியது. ஏனென்றால் மதம் என்பது மேல் கட்டுமானம் சார்ந்தது. அதில் எண்ணங்கள், நம்பிக்கைகள் மேலாதிக்கத்தை செலுத்தும். அடிப்படை மாறும் வேகத்திற்கு ஏற்ப மேல்கட்டுமானம் மாறிவிடாது. பழங்கால சிந்தனைகள் தொடரும்.

இவற்றை நேரடியாக அழிக்க முற்பட்டால் இவை வேறு வடிவங்களில் வெளிப்படும். எனவே படிப்படியான பிரச்சாரத்தின் மூலம்தான் இந்த எண்ணங்களை நீக்க முடியும். அடிப்படையான மாறுதல், விஞ் ஞான வளர்ச்சி ஆகியன இவற்றை காலப்போக்கில் மாற்றும். இவை அனைத்தையும் தான் மதம் பற்றிய மார்க்சியப் பார்வை என்று கூறுகிறோம்.

# மாநில அந்தஸ்து மீண்டும் தருக: லடாக் மக்கள் பிரமாண்ட எழுச்சி!

கடந்த 2019இல் ஜம்முகாஷ்மீர் மாநிலத்துக்கு அரசியல் சட்டத்தின் 371ஆவது பிரிவு வழங்கிய சிறப்பு அந்தஸ்தை ஒன்றிய மோடி அரசு வகுப்புவாத கண்ணோட்டத்துடன் ரத்து செய்தது. இதனால் ஜம்மு காஷ்மீர் என்கிற மாநிலம் 2 ஆக பிரிக்கப்பட்டு, ஜம்முகாஷ்மீர் ஒரு யூனியன் பிரதேசமாகவும், லடாக் மற்றொரு யூனியன் பிரதேசமாகவும் துண்டாடப்பட்டது. ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம் சட்டமன்றத்தை கொண்டது; ஆனால் அது செயலற்றது. லடாக் யூனியன் பிரதேசத்துக்கு அதுவும் கிடையாது.

இந்நிலையில், மீண்டும் முழுமையாக மாநில அந்தஸ்து வழங்கக் கோரி 3.2.2024 அன்று, கார்கில் மாவட்டங்களில் முழு அடைப்புடன் உறை பனியை பொருட்படுத்தாது, கையில் தேசியக் கொடியுடன் பல ஆயிரக்கணக்கானோர் பிரம்மாண்ட பேரணியுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பாக லடாக் போராட்ட குழுவினர் கூறுகை யில்,”எங்களுக்கு சட்டமன்றம் உருவாக்கி, மாநில அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். லடாக் மாநிலத்தை பழங்குடிகள் பிரதேசமாக பிரகடனப்படுத்தி அரசியல் சாசனத்தின் 6ஆவது பிரிவில் இணைக்க வேண்டும். அத்துடன் லே, கார்கில் ஆகிய மாவட்டங்களை 2 மக்களவை தொகுதிகளாகவும் அறிவித்து நாடாளுமன்றத்தில் பிரதிநி தித்துவம் தரப்பட வேண்டும்” என்ற கோஷங்கள் முழங்கப்பட்டன.



# வெளியேற்றுவோம் பா.ஜ.கவை

## இளைஞர் பெருமன்றம் ஒரு கோடி மக்கள் சந்திப்பு இயக்கம்!

### தமிழ்நாடு மாநில நிர்வாக குழு முடிவு




அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநில நிர்வாக குழு மற்றும் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் 4.2.2024 ஞாயிறு அன்று சென்னை பாலன் இல்லத்தில் மாநிலத் துணைச் செயலாளர் துரை.அருள் ராஜன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் கலந்து கொண்டு அரசியல் விளக்க உரையாற்றினார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.பழனிச்சாமி வாழ்த்துரை வழங்கினார். மாநில செயலாளர் க.பாரதி அமைப்பு நிலை பணிகள் குறித்து உரையாற்றினார்.

கூட்டத்தில் மாநிலத் தலைவர் த.கு வெங்கடேசன், மாநிலத் துணைச் செயலாளர்கள் இரா.தமிழ் பெருமாள், வே. வசந்தகுமார், மாநிலத் துணைத் தலைவர் மோ.வெங்கடேசன் உள்ளிட்டு மாநில நிர்வாக குழு மற்றும் மாவட்ட செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன...

பிப்ரவரி 25 முதல் மார்ச் 5 வரை வரலாறு காணாத வேலையின்மை, விலைவாசி உயர்வு ஊழல் ஆகியவற்றை எதிர்த்து "வெளியேற்றுவோம் பா.ஜ.கவை" எனும் முழக்கத்தோடு தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடி மக்கள் சந்திப்பு இயக்கத்தை நடத்துவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த மக்கள் சந்திப்பு இயக்கத்தை அரசியல் கட்சித்தலைவர்கள் முற்போக்கு சிந்தனையாளர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் தொடங்கி வைக்கிறார்கள்.

மாவீரன் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ், நினைவு நாளையொட்டி மார்ச் 23ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மற்றும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் இணைந்து ரத்த தான முகாம் நடத்துவது எனவும் இம்முகாமிற்கு சிறப்பான ஏற்பாடுகளை செய்வது எனவும் முகாமில் குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர் மாணவர்களை பங்கேற்க செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

## ஜனநாயகப் படுகொலை

சண்டிகர் மேயர் தேர்தலில் பாஜக செய்த மோசடி குறித்து தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்டின் கடுமையான கருத்துக்கள் பாஜகவின் ஜனநாயக செயல்முறையையே முற்றிலும் புறக்கணிப்பதை முற்றிலும் அம்பலப்படுத்தியுள்ளது. "ஜனநாயகத்தை இப்படி கொலை செய்ய அனுமதிக்க மாட்டோம்" என்று தலைமை நீதிபதி சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது. ஜனநாயகத்தின் கழுத்தை நெரிக்க பாஜக முயற்சிக்கிறது. மேலும் காலதாமதமாவதற்கு முன்பு நாடு எழுந்தாக வேண்டும்!

## தரம்தாழ்ந்த செயல்

பாஜகவின் அதிகார மோகம், சண்டிகர் மேயர் தேர்தலில் மிகத் தெளிவாகத் தெரிந்தது.

இந்தியா கூட்டணியைச் சேர்ந்த 8 கவுன்சிலர்களின் வாக்குகளை நிராகரித்தது அவர்களின் விரக்தியைக் காட்டுகிறது. மேயர் பதவிக்கு பாஜக இந்த அளவுக்குத் தரம் தாழ்ந்து செல்லுமானால், நாடாளுமன்றத் தேர்தலில் எந்த அளவுக்கு கீழிறங்கும் என்பதை மக்கள் பார்க்க வேண்டும்.

**டி. ராஜா**

"என் மகன் உயிர் பிழைப்பதற்கு சிறிது வாய்ப்பு இருப்பதாக டாக்டர் என்னிடம் சொன்னார். நான் மருத்துவமனையை விட்டு வெளியே சென்று விட்டு மீண்டும் திரும்பி வந்தேன். அங்கு அந்த மருத்துவமனையையோ, மருத்துவரையோ, என் மகனையோ காணவில்லை"

**– காசாவைச் சேர்ந்த ஒரு தந்தை**

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

துவக்க விழா பேரிரைச்சலோடு நடத்தப்பட்டது.

எதிர்க்கட்சிகள் இடையே உரிய ஒற்றுமை ஏற்படாததால் 5 மாநில தேர்தலில், தெலுங்கானா தவிர்த்த மாநிலங்களில் பிஜேபி வெற்றி பெற்றது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டது இந்தியா கூட்டணி பின்னடைவதற்கான முக்கிய காரணமாகும்.

பாஜக ஆளாத மாநிலங்களில் ஆளுநர்கள், அந்த அரசுகளை செயல்படவிடாமல் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் உச்சநீதி மன்றத்தின் கதவுகளை தட்ட வேண்டி நேரிட்டது. ஆளுநர்களை பாதுகாப்பதற்காக மத்திய ரிசர்வ் படையை அனுப்பும் அளவுக்கு ஒன்றிய அரசு சென்று இருப்பது கூட்டாட்சிக்கு எதிரான நடைமுறையாகும்.

தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவி வெளிப்படையாக அரசியல் பேசுகிறார். மேற்கு வங்காளத்தில் சிவி ஆனந்த போஸ், கேரளாவில் ஆரிப் முகமது கான், பஞ் சாபில் பன்வாரிலால் புரோகித் ஆகியோர் இடைவிடாது பிரச்சனைகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

ஆளுநர் பதவி என்பது காலனி ஆதிக்கத்தின் தொடர்ச்சியாக நமது ஜனநாயகத்திற்கு ஒரு பெரும் சுமையாக மாறி இருக்கிறது என்பதால் ஆளுநர் பதவியை அகற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரி வருகிறது.மக்களைப் பிரித்து வைப்பதற்காக, ஒன்றை அடுத்து மற்றொன்றாக தொடர்ந்து பாஜக அரசு மதவெறியூட்டிக் கொண்டிருக்கிறது

உத்தரப்பிரதேசத்தில் ஹலால் பிரச்சனை எழுப்பப்பட்டது. மத்திய பிரதேசம் ராஜஸ்தானில் இறைச்சி மற்றும் முட்டை விற்பவர்கள் மீது ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தாக்குதல் நடத்துகிறார்கள்.

மதவெறியூட்டி மக்களை பிரிப்பதற்கு சமூக ஊடகங்கள் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன. பொய்யுரைகள், திரித்து கூறுதல், போலியான காணொளிகள், இந்துக்கள் தாக்கப்படுவதாக பொய்ச் செய்திகள் என பல்வேறு சதிகள் அரங்கேற்றப்படுகின்றன.

தொடர்ச்சியாக பிரச்சனைகளை ஏற்படுத்த அவர்கள் கூறிவந்தராமர் கோவில் கட்டி திறப்பு விழா நடந்த பிறகு, இப்போது ஞானவாபி மசூதியை அடையாளப்படுத்தி அடுத்த கலவரங்களுக்கு அடித்தளம் இடுகிறார்கள்

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகப் பாடப் புத்தகங்கள் திருத்தப்படுகின்றன. ஆர்.எஸ்.எஸ். சின் குறுகிய பார்வைக்கு உகந்த வகையில், பொய்யான வரலாறு பாடமாக்கப்படுகிறது. மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்டது, சர்தார் பட்டேல் ஆர் எஸ் எஸ் – ஐ தடை செய்தது ஆகியவை நீக்கப்படுகின்றன. முகலாயர்கள், சுல்தான்களின் ஆட்சிக் காலத்தை பற்றிய பொய்யான தீய பிரச்சாரம் நுழைக்கப்படுகிறது. எதிர்கால தலைமுறையின் நெஞ்சங்களில் நஞ்சு கலக்கப்படுகிறது.

இந்திய குற்றவியல் சட்டம், தண்டனை சட்டம், சாட்சியச் சட்டம் ஆகியவை, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் இடைநீக்கம் செய்து வெளியேற்றிவிட்டு, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

பிரிட்டிஷ் அடிமை ஆட்சியின் சட்டங்களை மாற்றுவதாக கூறினாலும் அதைவிட கொடூரமான அம்சங்கள் இவற்றில் சேர்க்கப்படுகின்றன.

புதிய நாடாளுமன்ற கட்டடத்தில் இரண்டு பேர் உள்நுழைந்து புகை குண்டுகளை வீசினார்கள். அவர்களுக்கு அனுமதி தந்தது பிஜேபி யின் மைசூர் எம்.பி. – பிரதாப் சிம்கா ஆவார். ஆனால் அதைப் பற்றி விசாரணையே நடத்தாமல் உள்நுழைந்தவர்களின் பின்னணியில் காங்கிரசும் இடதுசாரிகளும் உள்ளனரா என்று வேண்டுமென்றே கவனம் திசை திருப்பப்படுகிறது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மக்களுக்கு ஏமாற்றத்தை தருகின்றன. சட்டத்தின் 370 வது பிரிவை அகற்றியது பற்றி யோசிக்காத தீர்ப்பு வந்துள்ளது. அங்கு உண்மை நிலையை கண்டறிவதற்கும் மறுநிவாரணம் தருவதற்கும் ஆணையம் அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியிருந்தாலும் அது நிறைவேற்றப் படப்போவதில்லை.

பில்கிஸ் பானு வழக்கில் பல கொலைகளைச் செய்து பாலியல் வல்லுறவு வெறியாட்டங்களில் ஈடுபட்டவர்கள், முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்டதை உச்ச நீதிமன்றம் கண்டித்து இருக்கிறது. அதே நேரத்தில் பீமா கோரேகான் வழக்கில் நீண்ட காலமாக சிறை இருக்கும் உமர் காலித் உள்ளிட்ட பல குற்றம் சுமத்தப்பட்டவர்கள், இன்னும் விடுவிக்கப்படாமலும் விசாரணை இல்லாமலும் பல ஆண்டுகளாக சிறையிலேயே இருக்கிறார்கள்.

200க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டு, பல்லாயிரம் பேர் காயம் அடைந்து, ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து நிற்கும் மணிப்பூரில் எட்டு மாதங்கள் ஆகியும் இன்னும் அமைதி நிலை நாட்டப்படவில்லை. உள்ளிட்டவை குறித்தும், பாலஸ்தீனத்தின் மீதான கொடூரத் தாக்குதல், உக்ரைன் போர் உள்ளிட்ட உலகத்தின் பல்வேறு நாடுகளின் அரசியல் சூழல் குறித்தும் தேசிய குழுவின் முன்பு வைக்கப்பட்ட அறிக்கை விரிவாக பேசுகிறது.

### தேர்தல் நிதி:

தேர்தலுக்கான நிதியை மையப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதித்த தேசிய குழு, ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 ரூபாய் வீதம் வசூலித்து, ஒவ்வொரு கிளையும் நேரடியாக அகில இந்திய மையத்துக்கு அனுப்ப வேண்டும் என முடிவு செய்தது.

தமிழ்நாட்டில் இருந்து தேசிய நிர்வாக குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, தேசிய குழு உறுப்பினர்கள் நா.பெரியசாமி, வை.சிவ.புண்ணியம், வகிதா நிஜாம், டி.ராமசாமி, எம்.கண்ணகி, கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், புதுச்சேரியிலிருந்து அ.மு.சலீம், தினேஷ் பொன்னையா ஆகியோர் தேசிய குழு கூட்டத்தில் பங்கேற்றனர்.

**தொகுப்பு: டி.எம்.மூர்த்தி**

## நாடாளுமன்றத் தேர்தலும் நமது அணுகுமுறையும்!

நமது விஜயவாடா காங்கிரஸில் மதச்சார்பற்றஜனநாயக சக்திகளின் ஒற்றுமையின் மூலம் மட்டுமே ஆர்எஸ்எஸ் – பாஜக கூட்டணியை தோற்கடிக்க முடியும். எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை பலப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானித்தது. நாம் இந்த வழிகாட்டலை பின்பற்றி வருகிறோம். 20க்கும் மேற்பட்ட கட்சிகள் சேர்ந்து உருவாக்கியுள்ள "இந்தியா" கூட்டணியில் நமது கட்சி அங்கம் வகிக்கிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும், அந்த மாநிலத்தின் அரசியல் சூழ்நிலையைப் பொறுத்து பாஜகவை எதிர்கொள்ளும் உத்திகளைஇந்தியா கூட்டணிவகுக்கும். இடப் பகிர்வு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. கட்சியின் மாநில குழுக்கள், அந்தந்த மாநிலத்தில் உள்ள இந்தியா கூட்டணியில் தமது இடங்களுக்கான கோரிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டும். 2024 பொதுத்தேர்தலில் பிஜேபியை ஆட்சி அதிகாரத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்பதே நமது இலக்கு அத்துடன் நாடாளுமன்றத்தில் நமது கட்சியின் வலிமையையும் அதிகரிக்க வேண்டும்.

மேற்கு வங்கம் மற்றும் திரிபுராவில் இடது முன்னணியிலும், கேரளாவில் இடது ஜனநாயக முன்னணியிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து அங்கம் வகிக்கும். ஜனநாயக அரசியல். இந்த இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றவும், மக்களைத் தேர்தலுக்கான தொகுதிகள் மற்றும் வேட்பாளர்களின் பட்டியலை விரைவில் சமர்ப்பிக்கவும், தேர்தலில் நமது கட்சி மற்றும் தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அனைத்து மாநிலக் குழுக்கள் அனைத்தும் கடுமையாக உழைக்க வேண்டும்.

விஜயவாடாவில் நடந்த 24வது மாநாட்டில்,

1) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை வலுப்படுத்துவது,
2) இடதுசாரி ஒற்றுமையை திடப்படுத்துவது,
3) ஆர் எஸ் எஸ் – பிஜேபி ஆட்சி அதிகாரத்திலிருந்து அகற்ற முற்போக்கு சக்திகளின் பரந்த கூட்டமைப்பை உருவாக்குவது
4) வாழ்வாதாரப் பிரச்சினைகளில் வெகுஜனப் போராட்டங்களைத் தீவிரப்படுத்தி, சோசலிசத்தை நோக்கிய சமூக மாற்றத்திற்கான புரட்சிகர கடமையை முன்னெடுப்பது

என முடிவெடுத்தோம்.

கட்சியின் அனைத்து கிளைகளும் இந்த வழியில் கடுமையாக உழைக்க வேண்டும்.

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், இந்த திசை வழியில் செயல்பட்டு, கட்சியை வலுப்படுத்தவும், முற்போக்கு சக்திகளின் வெற்றியை உறுதி செய்யவும், பாஜக – ஆர்எஸ்எஸ் கூட்டணியைத் வீழ்த்தவும் உரிய தீவிர பணியாற்ற அனைத்து மாநில குழுக்களும் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57
JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.